# D0113

# சிறுபாணாற்றுப்படை (புற இலக்கியம் - 1)

# D0113

## சிறுபாணாற்றுப்படை (புற இலக்கியம் - 1)

# பொருளடக்கம்

Title Page
Table Of Contents
சிறுபாணாற்றுப்படை
ஆசிரியரைப் பற்றி
பாடம் - 1
பாட அமைப்பு
1.0 பாட முன்னுரை
1.1 பத்துப்பாட்டு
1.2 வகைப்பாடு
1.3 சிறுபாணாற்றுப்படை - ஓர் அறிமுகம்
1.4 தொகுப்புரை
பாடம் - 2
பாட அமைப்பு
2.0 பாட முன்னுரை
2.1 ஆற்றுப்படையின் சிறப்பு
2.2 பாலை நிலம் பற்றிய செய்திகள்
2.3 விறலியர் பற்றிய செய்திகள்
2.4 தொகுப்புரை
பாடம் - 3
பாட அமைப்பு
3.0 பாட முன்னுரை
3.1 வஞ்சி நகரின் சிறப்பு
3.2 மதுரை நகரின் சிறப்பு
3.3 உறந்தை நகரின் சிறப்பு
3.4 கடையெழு வள்ளல்கள்
3.5 தொகுப்புரை
பாடம் - 4
பாட அமைப்பு
4.0 பாட முன்னுரை
4.1 நல்லியக்கோடனின் தலைமை
4.2 பாணரின் வறுமையும் செல்வமும்
4.3 பாணனுக்கு வழிகாட்டுதல்
4.4 தலைநகர்ச் சிறப்பு
4.5 தொகுப்புரை
பாடம் - 5
பாட அமைப்பு
5.0 பாட முன்னுரை
5.1 நல்லியக்கோடனின் புகழ்
5.2 யாழின் சிறப்பு
5.3 வள்ளல்
5.4 தொகுப்புரை
பாடம் - 6
பாட அமைப்பு
6.0 பாட முன்னுரை

6.1 உவமை
6.2 மாந்தர் வருணனை
6.3 நில வருணனை
6.4 பிற வருணனைகள்
6.5 தமிழர் பண்பாடு
6.6 தொகுப்புரை
D01131 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
D01131 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
D01132 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
D01132 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
D01133 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
D01133 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
D01134 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
D01134 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
D01135 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
D01135 தன் மதிப்பீடு : வினாக்கள் - II
D01136 தன் மதிப்பீடு : வினாக்கள் - I
D01136 தன் மதிப்பீடு : வினாக்கள் - II

# சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படை – 1
சிறுபாணாற்றுப்படை – 2
சிறுபாணாற்றுப்படை – 3
சிறுபாணாற்றுப்படை – 4
சிறுபாணாற்றுப்படை – 5
சிறுபாணாற்றுப்படை – 6

# ஆசிரியரைப் பற்றி



பெயர் : முனைவர் க. துரையரசன்
தந்தை பெயர் : கா. கலியபெருமாள்
கல்வித் தகுதி : எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.
பணி : 1) தமிழாசிரியர், ஆக்ஸ்போர்டு மெட்ரிக்குலேஷன்
மேனிலைப்பள்ளி, கூத்தாநல்லூர்.
2) தமிழாசிரியர், எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக்குலேஷன்
மேனிலைப்பள்ளி, சென்னை-600101.
3) முதுநிலை தமிழ் விரிவுரையாளர், அரசு கலைக்
கல்லூரி தன்னாட்சி), கும்பகோணம்-612001.
தற்பொழுதைய
பணிநிலை : உதவி இயக்குநர்,
தமிழ் இணையப் பல்கலைக் கழகம்,
பணியிட முகவரி : சென்னை.
விருப்பமான
துறைகள் : இலக்கணம், சங்க இலக்கியம், நீதி இலக்கியம்,
திறனாய்வு
வெளியிட்ட
கட்டுரைகள் : ஏறக்குறைய ஐம்பது கட்டுரைகள்
ஆய்வுப் பணி : 1) எம்.ஃபில். பட்டம் பெற்றவர்கள் ஐவர்.
2) பல்வேறு கருத்தரங்குகளில் பங்கேற்பு.
3) மாணவப் பருவந்தொட்டே ஆய்வுக்
கட்டுரைகள் எழுதி வருதல்

தொடர்பு முகவரி : முனைவர் க. துரையரசன், உதவி இயக்குநர்,
தமிழ் இணையப் பல்கலைக் கழகம்,
எல்நெட் மென்பொருள் நகரம்,
சிபிடி சாலை, தரமணி, சென்னை – 600113.
தொலைபேசி : 044-22541012/13
மின்.அஞ்சல் : darasan2005@yahoo.com
duraiarasank@hotmail.com

# பாடம் - 1

## D01131 சிறுபாணாற்றுப்படை – 1

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் பொதுநிலையில் பத்துப்பாட்டையும் சிறப்பு நிலையில் சிறுபாணாற்றுப்படையையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்கிறது. பத்துப்பாட்டு நூல்களின் வகை, தொகை பற்றி இப்பாடம் விளக்குகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- பத்துப்பாட்டு நூல்கள் பற்றிய அறிமுகச் செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.
- பத்துப்பாட்டைப் பாடியோர், பாடப்பட்டோர் யாவர் என்பதை அறியலாம்.
- பத்துப்பாட்டு நூல்கள் மூன்று வகைப்படும் என்பது தெரிய வரும்.
- ஆற்றுப்படை நூல்கள் பற்றிய புரிதல் ஏற்படும்.
- சிறுபாணாற்றுப்படை என்பதன் பெயர்ப் பொருத்தம் உள்ளிட்ட செய்திகளை அறியலாம்.

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை

1.1 பத்துப்பாட்டு

1.2 வகைப்பாடு

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

1.3 சிறுபாணாற்றுப்படை – ஓர் அறிமுகம்

1.4 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 1.0 பாட முன்னுரை

மிகப் பழங்காலத்தில் தமிழில் பல இலக்கியங்கள் தோன்றின. இவை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. இப்பாடல்களுள் சில நீண்ட அளவில் இருந்தன; சில பாடல்கள் குறுகிய அளவில் இருந்தன. நீண்ட பாடல்களை ஒன்றாகச் சேர்த்துத் தொகுத்தனர். இதற்குப் பத்துப்பாட்டு என்று பெயர். குறுகிய பாடல்களை எட்டு நூல்களாகச் சேர்த்துத் தொகுத்தனர். இதற்கு எட்டுத்தொகை என்று பெயர்.

இவ்விரு வகைத் தொகுப்பு நூல்களையும் சங்க நூல்கள் என்பர். இவற்றிற்குப் பதினெண் மேல்கணக்கு நூல்கள் என்னும் பெயரும் உண்டு. இப்பாடத்தில் பத்துப்பாட்டு நூல்கள் பற்றிச் சுருக்கமாகவும், அவற்றுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படை பற்றி விரிவாகவும் விளக்கப்படுகிறது.

# 1.1 பத்துப்பாட்டு

பத்துப்பாட்டு என்பது பத்துப்பாடல்களால் ஆன ஒரு தொகுப்பு நூல் ஆகும். இதனைப் பத்து நூல்கள் என்று சொல்வதும் உண்டு. இத் தொகுப்பில் உள்ள பாடல்கள் (நூல்கள்)

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- கூத்தராற்றுப்படை (அல்லது) மலைபடுகடாம்
- முல்லைப்பாட்டு
- குறிஞ்சிப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- பட்டினப்பாலை

இவற்றை 1889ஆம் ஆண்டில் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அச்சு நூல் வடிவில் கொண்டு வந்தார்.

## 1.1.1 பாடியோரும் பாடப்பட்டோரும்

பத்துப்பாட்டைப் பாடியோரும் பாடப்பட்டோரும்:

| வ.எண் | நூலின் பெயர் | பாடியோர்/ஆசிரியர் | பாடப்பட்டோர் |
|---|---|---|---|
| 1. | திருமுருகுஆற்றுப்படை | நக்கீரர் | முருகக் கடவுள் |
| 2. | பொருநர்ஆற்றுப்படை | முடத்தாமக்கண்ணியார் | கரிகால் பெரு வளத்தான் |
| 3. | சிறுபாண்ஆற்றுப்படை | நல்லூர் நத்தத்தனார் | நல்லியக்கோடன் |
| 4. | பெரும்பாண்ஆற்றுப்படை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் | தொண்டைமான்இளந்திரையன் |
| 5. | கூத்தர்ஆற்றுப்படை | பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் | நன்னன் சேய்நன்னன் |
| 6. | முல்லைப்பாட்டு | நப்பூதனார் | - |
| 7. | குறிஞ்சிப்பாட்டு | கபிலர் | - |
| 8. | மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் | |

பாண்டியன் நெடுஞ்செழியன்

| | | |
|---|---|---|
| 9. | நெடுநல்வாடை - | நக்கீரர் |
| 10. | பட்டினப்பாலை - | கடியலூர் உருத்திரங் கண்ணனார் |

பத்துப்பாட்டைப் பாடிய புலவர் எட்டுப்பேர்; பாடப்பட்டோர் ஆறு பேர். அவற்றுள் ஆற்றுப்படை இலக்கியங்கள் ஐந்து. அக இலக்கியங்கள் நான்கு. புற இலக்கியம் ஆறு. அக இலக்கியங்களில் பாட்டுடைத் தலைவனின் பெயர் சுட்டப்பெறும் மரபு தமிழ் இலக்கியங்களில் கிடையாது.

### 1.1.2 அடிவரையறையும் பா வகையும்

பத்துப்பாட்டின் அடி அளவு மற்றும் பா வகை பின்வருமாறு :

| வ.எண் | நூலின் பெயர் | அடிகள் | பா |
|---|---|---|---|
| 1. | திருமுருகு ஆற்றுப்படை | 317 | ஆசிரியப்பா |
| 2. | பொருநர் ஆற்றுப்படை | 248 | ஆசிரியப்பா |
| 3. | சிறுபாண் ஆற்றுப்படை | 269 | ஆசிரியப்பா |
| 4. | பெரும்பாண் ஆற்றுப்படை | 500 | ஆசிரியப்பா |
| 5. | கூத்தர் ஆற்றுப்படை | 583 | ஆசிரியப்பா |
| 6. | முல்லைப்பாட்டு | 103 | ஆசிரியப்பா |
| 7. | குறிஞ்சிப்பாட்டு | 261 | ஆசிரியப்பா |
| 8. | மதுரைக்காஞ்சி | 782 | ஆசிரியப்பா,வஞ்சிப்பா |
| 9. | நெடுநல்வாடை | 188 | ஆசிரியப்பா |
| 10. | பட்டினப்பாலை | 301 | ஆசிரியப்பா,வஞ்சிப்பா |
| மொத்தம் | | 3552 | |

பத்துப்பாட்டில் உள்ள மொத்த அடிகள் 3552. பத்துப்பாட்டில் மிகப் பெரியது மதுரைக்காஞ்சி (782 அடிகள்); மிகச் சிறியது முல்லைப்பாட்டு (103 அடிகள்). அனைத்தும் ஆசிரியப்பாவால் ஆனவை.

## 1.2 வகைப்பாடு

பத்துப்பாட்டு நூல்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை :

புற நூல்கள் (ஆற்றுப்படை நூல்கள் 5 + மதுரைக்காஞ்சி) - 6

அக நூல்கள் – 4

—-

10

——

### 1.2.1 ஆற்றுப்படை நூல்கள்

ஆற்றுப்படை இலக்கியம் என்பது தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்று. ஆறு – வழி; படை – படுத்தல். எனவே, ஆற்றுப்படை என்றால் வழிப்படுத்தல் அல்லது வழிகாட்டுதல் என்பது பொருள்.

- ஆற்றுப்படை – விளக்கம்

பரிசு பெற்ற பாணர் முதலியோர் தாம் பெற்ற பெரும் செல்வத்தைத் தம் இனத்தைச் சார்ந்தவர்க்குக் கூறித் தம்மைப் போல் அவர்களும் பயன் பெற, தாம் பரிசுபெற்ற வள்ளல் அல்லது அரசனிடம் வழிப்படுத்துவது ஆற்றுப்படை ஆகும்.

இதனைச் சற்று விரிவாகப் பின்வருமாறு கூறலாம்:-

வறுமையால் துன்பப்பட்ட ஒருவன் ஓர் அரசனிடம் அல்லது வள்ளலிடம் சென்றான்; அவனைப் புகழ்ந்து பாடினான்; பரிசுகள் பல பெற்றான்; தன் வீட்டிற்குத் திரும்பி வருகிறான்.

பரிசு பெற்ற அவன் திரும்பி வரும் பொழுது அவ்வழியில் துன்பம் கொண்ட முகத்துடன் ஒருவன் எதிரே வருகிறான். அவனிடம், “துன்பமும் வாடிய முகமும் உடையவனே! உனது துன்பத்தைத் தீர்க்கும் ஒருவன் உள்ளான். அவன் இன்ன பெயரை உடையவன் (அரசன் அல்லது வள்ளல் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுவான்). அவன் இன்ன ஊரில் இருக்கிறான். அவ்வூருக்குச் செல்லும் வழி இது. நீ அவனிடம் இவ்வழியாகச் செல்வாயாக. மிகுதியான பொருளைப் பெற்றுத் துன்பம் நீங்கி வாழ்வாயாக” என்று துன்பம் தீரும் வழிகளைக் கூறி அவனை அனுப்பி வைப்பான்.

இவ்வாறு பரிசு பெற்ற ஒருவன் பரிசு பெற விரும்பிச் செல்லும் ஒருவனுக்கு, ஓர் அரசன் அல்லது வள்ளலைப் பற்றியும் அவன் ஊருக்குச் செல்லும் வழிகளைப் பற்றியும் கூறுவான்.

இவ்வகை அமைப்பில் பாடல்கள் இருக்கும். இம் மரபிற்கு ஆற்றுப்படை என்பது பெயர். பத்துப்பாட்டுத் தொகுப்பில் உள்ள ஆற்றுப்படை நூல்கள்:

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை

- பெரும்பாணாற்றுப்படை
- கூத்தராற்றுப்படை அல்லது மலைபடுகடாம்

- திருமுருகாற்றுப்படை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் (பாடப் பெறுபவன்) முருகக் கடவுள். இக்கடவுள் இருக்கின்ற இடங்கள், வழிபடும் முறைகள் ஆகியவற்றைக் கூறி முருகக் கடவுளின் அருளைப் பெறுவதற்கான வழிகள் இப்பாட்டில் கூறப்பட்டுள்ளன.

எனவே, அரசன் அல்லது வள்ளலிடம் பொருள்களைப் பெறுவதற்கு உரிய வழிகளைக் (ஆறுகளை) கூறுவது போல, முருகக் கடவுளின் அருளைப் பெறுவதற்கு உரிய வழிகளை இப்பாடல் கூறுவதால், இதற்குத் திருமுருகாற்றுப்படை என்னும் பெயர் வழங்கலாயிற்று. இந்நூலுக்குப் புலவராற்றுப்படை என்னும் பெயரும் உண்டு.

- பொருநராற்றுப்படை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான்.

பொருநர் என்றால் புகழ்ந்து பாடுவோர் என்று பொருள். இவர்கள் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் என்று மூவகையினர். பொருநராற்றுப்படையில் போர்க்களம் பாடுவோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கரிகால் பெருவளத்தான் என்னும் அரசனிடம் பொருநன் ஒருவன் பரிசு பெற்று வந்தான். அவன், தன் எதிரில் வந்த வேறு ஒரு பொருநனிடம் கரிகால் பெருவளத்தானிடம் சென்று பரிசு பெறும் வகையில் வழிப்படுத்தியதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஒரு பொருநன் வேறொரு பொருநனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் பொருநராற்றுப்படை என்னும் பெயர் பெற்றது.

- சிறுபாணாற்றுப்படை

இந்நூல் பற்றிய செய்திகளை இப்பாடத்தில் 1.3 என்ற பகுதியில் காணலாம்.

- பெரும்பாணாற்றுப்படை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன். இவன் ஓர் அரசன்.

இவனிடம் பரிசு பெற்று வந்த ஒரு பெரும்பாணன், அவன் எதிரில் வந்த வேறு ஒரு பெரும்பாணனை அம்மன்னனிடம் சென்று பரிசு பெறும் வகையில் வழிகாட்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஒரு பெரும்பாணன் வேறொரு பெரும்பாணனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் பெரும்பாணாற்றுப்படை என்னும் பெயர் பெற்றது.

- கூத்தராற்றுப்படை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய் நன்னன். இந்நூலுக்கு மலைபடுகடாம் என்னும் பெயரும் உண்டு.

மலையில் அருவிநீர் விழுகின்ற பொழுது இனிய ஓசை ஏற்படும். இவ்வோசையைக் கடாம் என்று சிறப்பித்துக் கூறுவதால் மலைபடுகடாம் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்று கூறுவர்.

சிலர், யானையை மலையாகவும், அதன் மத நீரை அருவியாகவும் கற்பனை செய்து புலவர் பாடியமையால் மலைபடுகடாம் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்று கூறுவர்.

நன்னன் என்ற மன்னனிடம் பரிசு பெற்று வந்த கூத்தன் ஒருவன், தன் எதிரில் வந்த வேறு ஒரு கூத்தனை அம் மன்னனிடம் சென்று பரிசு பெறும் வகையில் வழிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஒரு கூத்தன் வேறொரு கூத்தனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் கூத்தராற்றுப்படை என்னும் பெயர் பெற்றது.

### 1.2.2 மதுரைக்காஞ்சி

பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள மற்றொரு புற நூல் உளது. அது மதுரைக்காஞ்சி.

இந்நூலுக்குக் கூடல் தமிழ் என்னும் பெயரும் உண்டு. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன்.

உலகில் உள்ள அனைத்தும் நிலை இல்லாதவை. காஞ்சி என்றால் நிலையாமையை வலியுறுத்துவது. பாண்டிய அரசன் நெடுஞ்செழியனுக்கு நிலையாமையை எடுத்துக் கூறி அவனை நல்வழிப் படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

### 1.2.3 அக நூல்கள்

பத்துப்பாட்டில் நான்கு நூல்கள் அகப்பொருள் செய்திகளைக் கூறுகின்றன. அகப்பொருள் என்பது தலைவன் – தலைவி (காதலன் – காதலி; கணவன் – மனைவி) இவர்களது அக வாழ்க்கைச் செய்திகளைக் கூறுவது ஆகும். அகப்பொருள் கூறும் நூல்களாவன:

- முல்லைப்பாட்டு
- குறிஞ்சிப்பாட்டு
- நெடுநல்வாடை
- பட்டினப்பாலை

அக இலக்கிய நூல்களில் பாட்டுடைத் தலைவனின் (பாடப்படும் தலைவனின்) பெயர் கூறுவது வழக்கம் இல்லை.

- முல்லைப்பாட்டு

தமிழில் அன்பின் அகத்திணைகள் ஐந்து. அவை :

- குறிஞ்சி
- முல்லை

- மருதம்
- நெய்தல்
- பாலை

இவற்றுள் முல்லைத் திணைக்கு உரிய அகப்பொருள் மரபுகளைப் (கொள்கைகளை) பின்பற்றி எழுதப்பட்ட நூல் முல்லைப்பாட்டு ஆகும்.

- குறிஞ்சிப்பாட்டு

குறிஞ்சித் திணைக்கு உரிய அகப்பொருள் மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட நூல் குறிஞ்சிப்பாட்டு ஆகும்.

- நெடுநல்வாடை அதாவது, தலைவனைப் பிரிந்த தலைவிக்கும் தலைவியைப் பிரிந்த தலைவனுக்கும் பிரிவினால் துன்பம் ஏற்படும் ; இத்துன்பம் கார்காலத்தில் வீசும் வாடைக்காற்றால் மிகுதிப்படும்.

இந்த வாடைக்காற்று, தலைவனைப் பிரிந்தமையால் தலைவிக்கு நீண்ட (நெடிய) வாடையாக உள்ளது. போரில் வெற்றி பெற்ற தலைவனுக்கு நல்ல வாடையாக உள்ளது. இவ்வாடைக்காற்றினால் ஏற்படும் துன்பம் பற்றிக் கூறும் இந்நூல் நெடுநல்வாடை என்னும் பெயர் பெற்றது. இந்நூல் அகப்பொருள் மரபுகளை மீறி அமைந்துள்ளதாகக் கூறி, சிலர் இதனைப் புறநூல் என்பர் (புற நூல் = புறப்பொருள் அடிப்படையில் அமைந்த நூல்).

- பட்டினப்பாலை

பட்டினத்தைச் (காவிரிப்பூம்பட்டினம்) சிறப்பித்துக் கூறுவதால் இந்நூல் பட்டினப்பாலை என்னும் பெயர் பெற்றது. இதற்கு வஞ்சி நெடும்பாட்டு என்னும் வேறு பெயரும் உண்டு.

### தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 1.3 சிறுபாணாற்றுப்படை - ஓர் அறிமுகம்

சிறுபாணாற்றுப்படை பத்துப்பாட்டுள் மூன்றாவது நூலாக இடம் பெற்றுள்ளது. இஃது ஆசிரியப்பாவால் ஆனது. 269 அடிகளைக் கொண்டது. பழம் பெரும் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இந்நூலுக்கு உரை எழுதி உள்ளார். பிற்காலத்தில் பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனாரும் வேறு சிலரும் இந்நூலுக்கு உரை எழுதி உள்ளனர்.

### 1.3.1 பெயர்ப் பொருத்தம்

குழல், யாழ் முதலான இனிமையான இசை தரும் கருவிகளை இசைப்பதில் (வாசிப்பதில்) திறம் பெற்றவர்களைப் பாணர் என்பர்.

மிடற்று வழியாக (குரல் வழியாக-வாய் வழியே) இன்னிசையை இசைப்பவர் (பாடுபவர்) இசைப்பாணர் ஆவர்.

யாழ் என்னும் இசைக்கருவியை இசைப்பதில் திறம் பெற்றவர்களை யாழ்ப்பாணர் என்பர்.

யாழ்ப்பாணர்களுள் பெரிய யாழை இசைப்பவர் பெரும்பாணர், சிறிய யாழை இசைப்பவர் சிறுபாணர்.

நல்லியக்கோடன் என்பவன் ஒரு சிற்றரசன். இவனைப் புகழ்ந்து பாடிய சிறுபாணன் ஒருவன் பரிசு பெற்று வருகிறான். இவன், தன் எதிரில் வந்த வேறு ஒரு சிறுபாணனை இம்மன்னனிடம் சென்று பரிசுபெறும் வகையில் நெறிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஒரு சிறுபாணன் வேறு ஒரு சிறுபாணனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் சிறுபாணாற்றுப்படை என்னும் பெயர் பெற்றது.

### 1.3.2 பாடியவரும் பாடப்பட்டோரும்

சிறுபாணாற்றுப்படை என்னும் நூலைப் பாடிய புலவர் பற்றித் தெரிய வரும் செய்திகளும் பாடப்பட்டவர்கள் பற்றிய செய்திகளும் கீழே கூறப்பட்டுள்ளன.

- பாடியவர்

சிறுபாணாற்றுப்படையைப் பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். இப் பெயரில் மூன்று செய்திகள் அடங்கி உள்ளன. அவை:

1)நத்தத்தனார் – இது புலவரின் இயற்பெயர். சிலர், தத்தனார் என்பதே இயற்பெயர் என்பர். சான்றோர்களின் பெயர்களுக்கு முன்னால் ‘ந’ சேர்ப்பது பழங்கால மரபு என்பதால் ந + தத்தனார் என்பது நத்தத்தனார் என்று இலக்கண முறைப்படி வந்தது என்று கூறுவர்.

2)நல்லூர் – இஃது அவர் பிறந்த ஊர்.

3)இடைக்கழி நாடு – நல்லூர் என்னும் ஊர் இருந்த நாடு இஃது என்றும், சென்னைக்குத் தென் மேற்கில் மதுராந்தகத்துக்கு அருகில் எடக்கு நாடு என்னும் பெயரில்

இன்றும் உள்ளது என்றும் கூறுவர்.

### 1.3.3 பாடப்பட்டோர்

சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் நல்லியக் கோடன். இவன் ஓய்மா நாட்டை ஆண்ட ஒரு சிற்றரசன். எனவே, இவன் ஓய்மா நாட்டு நல்லியக் கோடன் என்று சிறப்பித்துக் கூறப்பட்டான்.

ஓய்மா நாடு என்பது இப்பொழுதைய திண்டிவனத்தை ஒட்டி உள்ள பகுதி. இந்நாட்டின் தலைநகர் கிடங்கில் என்னும் ஊர்.

## 1.4 தொகுப்புரை

மாணவர்களே! இப்பாடத்தில் நீங்கள் பத்துப்பாட்டுப் பற்றிய அறிமுகச் செய்திகளைத் தெரிந்து கொண்டீர்கள். இதில் ஐந்து ஆற்றுப்படை நூல்களும், நான்கு அக நூல்களும் ஒரு புற நூலும் இடம் பெற்றுள்ளன. இவை 3552 அடிகளைக் கொண்டவை. மேலும், ஆற்றுப்படை நூல்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படை பற்றிய தெளிவும் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். சிறுபாணாற்றுப்படை பற்றிய எஞ்சிய பாடங்களில் இந்நூல் கூறும் செய்திகளை வகைப்படுத்திப் படிக்க இருக்கிறீர்கள்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 2

## D01132 சிறுபாணாற்றுப்படை – 2

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் சிறுபாணாற்றுப் படையின் 1 முதல் 40 அடிகளுக்கு உரிய விளக்கத்தைத் தருகிறது. சிறுபாணன் சென்ற பெருவழி பாலை என்பதால் அந்நிலம் பற்றிய செய்திகளைக் குறிப்பாக எடுத்துக்காட்டி, பின்பு சிறுபாணாற்றுப்படை கூறும் பாலை நிலக் காட்சியை விளக்குகிறது. விறலியரின் அழகு நலத்தையும் இயல்பையும் எடுத்துக் கூறுகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- சிறுபாணாற்றுப்படையின் முதல் 40 அடிகளில் கூறப்பட்டுள்ள செய்திகளை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.
- வறுமையுற்ற பாணனின் வாழ்வியல் நிலையைப் புரிந்து கொள்ளலாம்.
- பாலை நிலத்தின் வெம்மையை உணரலாம்.
- விறலியரின் அழகு நலனை இலக்கிய நுகர்வுடன் அனுபவிக்கலாம்.

# பாட அமைப்பு

2.0 பாட முன்னுரை

2.1 ஆற்றுப்படையின் சிறப்பு

2.2 பாலை நிலம் பற்றிய செய்திகள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

2.3 விறலியர் பற்றிய செய்திகள்

2.4 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 2.0 பாட முன்னுரை

சிறுபாணன் ஒருவன் வறுமையில் வாடுகிறான். அவன் தன் வறுமையைப் போக்கிப் பரிசு வழங்குவாரைத் தேடிச் செல்கிறான். தான் மட்டும் செல்லாது தன் விறலியரையும் உடன் அழைத்துச் செல்கிறான். அவன் செல்லும் பாதை கடும் வெப்பம் நிறைந்தும் நடத்தற்கு அரிதாகவும் உள்ள பாலை நிலப் பகுதி ஆகும். இப்பாலை நிலத்தின் வெம்மையும், விறலியரின் அழகு நலனும் இப்பாடத்தில் விளக்கிக் கூறப்படுகின்றன. இச்செய்திகள் சிறுபாணாற்றுப்படையில் 1-40 அடிகளில் அமைந்துள்ளன.

## 2.1 ஆற்றுப்படையின் சிறப்பு

அரசர் அல்லது வள்ளல்களிடம் பரிசு பெற்ற ஒருவன், பரிசு பெற விரும்பும் மற்றொருவனுக்கு வழிகாட்டுவதே ஆற்றுப்படையின் பொது இலக்கணம் ஆகும். இதனை,

> "பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ"

என்று தொல்காப்பியம் கூறுகிறது (பொருள், புறத்திணை, 88).

- பரந்த உள்ளம்

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பரந்த உள்ளம் கொண்டவர்கள் பாணர்கள். வறுமையால் வாடிய தாங்கள் பரிசு பெற்று வறுமை நீங்கியதைப் போலவே வறுமையுற்ற பிறரும் பரிசு பெற்று வறுமை நீங்கி மகிழ்வுடன் வாழ வேண்டும் என்று பாணர்கள் நினைத்தனர்.

- இடம் பெறும் செய்திகள்

சிறுபாணாற்றுப்படையில் முதல் 40 அடிகளிலும் விரிவாகப் பாலை நிலம், விறலியர் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

## 2.2 பாலை நிலம் பற்றிய செய்திகள்

சிறுபாணனை வறுமைத் துன்பம் வாட்டுகிறது. தன் துன்பத்தைப் போக்குவதற்கு வழி அவனுக்குத் தெரியவில்லை. யாராவது உதவ மாட்டார்களா என்னும் எண்ணத்தில் நடைப் பயணமாக அவன் சென்று கொண்டிருக்கிறான். அவன் செல்லும் பகுதி பாலை நிலமாக உள்ளது. இந்நிலம் பற்றி, சிறுபாணாற்றுப்படை முதல் 12 அடிகளில் கூறுகின்றது. அச் செய்திகளைப் படிப்பதற்கு முன்பு பாலை நிலம் பற்றிய சில செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

### 2.2.1 நில அமைப்பும் இயல்பும்

இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு நிலப் பகுதியை ஐந்து வகையாகப் பிரிப்பர். அவை:

குறிஞ்சி – மலையும் அதனைச் சார்ந்த பகுதியும்

முல்லை – காடும் அதனைச் சார்ந்த பகுதியும்

மருதம் – வயலும் அதனைச் சார்ந்த பகுதியும்

நெய்தல் – கடலும் அதனைச் சார்ந்த பகுதியும்

பாலை – மணலும் அதனைச் சார்ந்த பகுதியும்

இவற்றுள் பாலைவனம் என்பது தமிழகத்தில் இல்லை. ஆயினும், குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் தமது இயல்புகளில் இருந்து மாறுபடுவது உண்டு. இங்ஙனம் மாறுபட்ட நிலப் பகுதி பாலை என்று அழைக்கப்பட்டது.

- பாலை நிலத்தின் இயல்பு
- விரிந்து பரந்த நெடிய மணல் பரப்பு.
- பொதுவாக உயிரினங்கள் வாழ்வதற்குப் பொருத்தமற்ற சூழல்.
- நீர் அற்ற வறண்ட பகுதி.
- வெப்பம் மிக்க நிலப் பகுதி.
- சுழல் காற்று (சுழன்று வேகமாக வீசும் காற்று) மிகுந்த பகுதி.
- வழிப்பறிக் கொள்ளையர்கள் (வழிப் போக்கர்களைத் தாக்கி அவர்களின் பொருள்களைக் கவர்ந்து செல்வோர்) வாழும் பகுதி.

### 2.2.2 நிலமும் பொழுதும்

மேலே கூறியது போல நீரற்ற – வறண்ட – உயிர் இனங்கள் வாழ்வதற்குத் தகுதி அற்ற – வெப்பம் நிறைந்த நிலப் பகுதியே பாலை நிலம் ஆகும். அங்கே, வெப்பம் நிறைந்த மாதங்களான மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி (மார்ச் – ஆகஸ்டு) ஆகிய மாதங்களில் கடுமையான வெப்பம் நிலவும். இம் மாதங்கள் அந்நிலத்துக்கு உரிய பெரும்பொழுதுகள் (1) என்று கூறப்படுகின்றன. அதுபோல் நண்பகல் பொழுது இதற்கான சிறுபொழுது (2) ஆகும்.

(1) பெரும்பொழுது – ஓர் ஆண்டின் பிரிவுகள்

(2) சிறுபொழுது – ஒரு நாளின் பிரிவுகள்

- ஐவகை நிலங்களுக்கு உரிய பொழுதுகள்

நிலம் பெரும்பொழுது சிறுபொழுது

குறிஞ்சி கூதிர்காலம் (ஐப்பசி, கார்த்திகை)

முன்பனிக் காலம் (மார்கழி, தை) யாமம் (இரவு 10 மணி – 2 மணி)

முல்லை கார்காலம் (ஆவணி, புரட்டாசி) மாலை (மாலை 6 மணி – இரவு 10 மணி )

மருதம் பெரும்பொழுது ஆறும் வைகறை (இரவு 2 மணி – காலை 6 மணி)

விடியல் (காலை 6 மணி – 10 மணி)

நெய்தல் பெரும்பொழுது ஆறும் எற்பாடு (பிற்பகல் 2 மணி – மாலை 6 மணி)

பாலை இளவேனில் காலம் (சித்திரை, வைகாசி),

முதுவேனிற்காலம் (ஆனி, ஆடி),

பின்பனிக் காலம் (மாசி, பங்குனி). நண்பகல் (காலை 10 மணி – பிற்பகல் 2 மணி)

பாலை நிலம் பற்றிய இப் புரிதலோடு சிறுபாணாற்றுப்படை தரும் பாலை நிலச் செய்திகளைத் தொடர்ந்து பார்க்கலாம்.

### 2.2.3 பாலை நிலக் காட்சி

பாணர்கள் வறுமைத் துன்பத்தில் தவிக்கின்றனர். அவர்களது துன்பத்தை மேலும் அதிகப்படுத்துவதாகப் பாலை நிலத்தின் இயல்புகள் உள்ளன. பாணர்களின் நெஞ்சத்தில் ஏற்பட்டுள்ள துன்பத்தை மிகுதிப்படுத்திக் காட்டும் வகையில் பாலைநிலப் பின்னணியைப் புலவர் நத்தத்தனார் அமைத்துள்ளார்.

- நில மடந்தை

நிலத்தைப் பெண்ணாகப் (நில மடந்தை) புலவர் உருவகம் செய்கிறார். அவள் மூங்கில் ஆகிய தோள்களை உடையவள். மலையில் இருந்து வீழும் அருவியே அவள் மார்பகத்தின் மேல் கிடக்கும் முத்துமாலை. அருவி, மலையைவிட்டு இறங்கி அருகில் உள்ள காட்டிற்குள் நுழைகிறது. பிறகு காட்டாறாக மாறுகின்றது.

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை

அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போல

செல்புனல் உழந்த சேய்வரல் கான்யாற்று (அடிகள்: 1-3)

- வேனில் காலம்

காட்டாற்றின் நீர், கரையை மோதித் தாக்குகிறது. அதனால் அங்கு உள்ள பூம்பொழில் வருந்துகிறது. இவ்வாறு குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்கள் கார் (மழை) காலத்தில் உள்ளன.

ஆனால், இப்பொழுது கார் காலம் முடிந்து விட்டது. வேனில் (வெயில்) காலம் தொடங்கி விட்டது. இக்காலத்தில் குறிஞ்சி மற்றும் முல்லை நிலக்காட்சி மாறுகிறது. மலையில் அருவிகள் இல்லை. காட்டாற்றில் நீர் இல்லை. அதனால் குயில்கள் பூம்பொழிலில் நுழைந்து விளையாடுகின்றன. தம் அலகால் பூக்களைக் குடைகின்றன (கொத்துகின்றன). பூக்கள் உதிர்ந்து கரிய நிறத்தில் உள்ள ஆற்று மணற் பரப்பில் கிடக்கின்றன.

இத்தகைய மணல் பரப்பு வெப்பத்தால் சூடாகிக் கிடக்கிறது. அம்மணலில் கிடக்கும் பரல் கற்களும் (பருக்கைக் கற்கள் – சிறிய கற்கள்) வெப்பத்தால் சூடாகிக் கிடக்கின்றன. வெப்பம் மிகுந்த மணலும், பரல் கற்களும் அவ்வழியாக நடந்து செல்லும் பாணர்களின் கால்களுக்கு மிகுந்த துன்பத்தைத் தருகின்றன.

வெயில் உருப்புற்ற வெம்பரல் கிழிப்ப (அடி, 8)

- வேனில் காலத்து வெயிலின் கொடுமை

இங்ஙனம், வறுமைத் துன்பம் வாட்ட, வழிநடைப் பயணமாகப் பாணர்கள் செல்கின்றனர். அவர்களது துன்பத்தை மேலும் அதிகப்படுத்தும் வகையில் அவர்கள் செல்லும் பாலைநில வழி வெப்பம் மிகுந்து உள்ளது. பாலை நிலத்து வேனில் கால வெப்பம் கடுமையாக இருப்பதை,

காலை ஞாயிற்றுக் கதிர் கடாவுறுப்ப (அடி, 10)

என்று புலவர் குறிப்பிடுகிறார்.

வழக்கமாக ஒரு நாளில் வெப்பம் நண்பகல் வேளையில் மிகுதியாக இருக்கும். காலை, மாலை வேளைகளில் வெப்பம் குறைந்து இருக்கும். ஆனால், வேனில் காலத்தில் பாலை நிலத்தில் காலை, மாலை நேரங்களில் கூடச் சூரியனின் வெப்பம் நண்பகல் வெப்பத்தைப் போல இருப்பதாகப் புலவர் கூறுவது அறிந்து இன்புறத்தக்கதாகும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 2.3 விறலியர் பற்றிய செய்திகள்

விறலியர் என்போர் பாணர்களின் கூட்டத்தில் இடம்பெறுபவர்கள். இவர்கள் அக உணர்வுகளைப் புறத்தே வெளிப்படுத்திக் காட்டுவதில் விறல்பட (திறம்பட) நடிக்கும் ஆற்றல் உடையவர்கள். இவர்களும் பாணர்களுடன் பாலை நில வழியாக வருகின்றனர். இவர்களின் மென்மைமிக்க இயல்பையும் அழகையும் சிறுபாணாற்றுப்படை 13-40 அடிகளில் கேசாதிபாதமாக (தலை முதல் கால்வரை) அழகிய முறையில் வருணிக்கிறது.

### 2.3.1 வருணனை

தமிழ்ப் புலவர்கள் மனிதர்களை, குறிப்பாகப் பெண்களை வருணிப்பதில் இருவகை நெறிகளைப் பின்பற்றினர். அவை (1) கேசாதிபாதம், (2) பாதாதிகேசம் ஆகும்.

- கேசாதிபாதம்

கேசம்+ஆதி+பாதம்

கேசம்= முடி (தலை)

ஆதி= முதல்

பாதம்= அடி

இதில் ஒவ்வோர் உறுப்பாக எடுத்துக் கொண்டு, உவமை கூறி வருணிப்பர்.

முடி முதல் அடி வரை அதாவது தலை முதல் கால் வரை வருணிப்பது கேசாதிபாதம் ஆகும்.

- பாதாதிகேசம்

கேசாதிபாத வருணனைக்கு நேர் மாறானது பாதாதிகேச வருணனை.

பாதம் + ஆதி + கேசம். அதாவது அடி முதல் முடிவரை வருணித்தல் (பிற்காலத்தில் பாதாதிகேச வருணனை முறை தெய்வங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று இலக்கணம் வகுத்தனர்).

இந்நூலில் விறலியர் கேசாதிபாத வருணனை முறையில் வருணிக்கப்பட்டுள்ளனர்.

### 2.3.2 விறலியரின் கேசாதிபாத வருணனை

விறலியரின் கூந்தல் (முடி) முதல் பாதம் (அடி) வரை புலவர் நத்தத்தனார் வருணனை செய்துள்ள அழகு நயமாக உள்ளது.

- கூந்தல்

உலகிற்கு அருள் செய்ய வல்ல, மெல்லியதாய் வீழ்கின்ற மழையைப் போன்ற அழகு உடைய கருமையான கூந்தல்.

- சாயல் (மென்மை)

மழை மேகத்தைக் கண்டு மயில்கள் தம் தோகையை விரித்து ஆடுவது இயற்கை. விறலியரின் கூந்தலை மழை மேகம் என்று மயில்கள் நினைத்தன. அதனால் மகிழ்ச்சியாகத் தம் தோகையை விரித்து ஆடின. ஆனாலும் அவற்றிற்கு வெட்கம் (நாணம்) வந்து விட்டது. ஏன் தெரியுமா? தமது தோகையின் சாயல் (மென்மை) விறலியரின் கூந்தல் சாயலுக்குச் சமமாகாது என்று மயில்கள் கருதியதால் ஆகும்.

- நுதல்

நுதல் என்றால் நெற்றி. இது ஒளி மிக்கதாக உள்ளது. பெண்களின் நெற்றி ஒளி வீசக் கூடியது என்று கூறுவது வழக்கம்.

- கண்

நீலமணி போன்ற கண்கள்.

- பார்வை

மருட்சி உடைய இளமையான மானின் பார்வை போன்று உள்ளது.

- எயிறு

எயிறு என்றால் பல். நுங்கின் இனிய நீர் போன்று சுவையை உடையதாக எயிற்று நீர் அமைந்துள்ளது.

- முலை

கோங்கு என்ற மலரின் அரும்பைப் போன்று அணிகலன்களுக்கு இடையே அடங்கிக் கிடக்கும் மார்பகம்.

- தொடை

கரிய பெண் யானையின் தும்பிக்கையைப் போன்ற செறிந்த தொடை.

- ஓதி (மயிர் முடிப்பு)

வாழைப் பூவின் தோற்றம் போன்ற அழகிய ஓதி.

- அடி

ஓடி இளைத்து வருந்துகின்ற நாயின் நாக்கைப் போன்ற பாதம். சிலம்பு முதலிய அணிகலன்கள் ஏதும் இன்றி அழகற்று இருக்கிறது.

- சுணங்கு (தேமல்)

வண்டுகள் மொய்த்து ஆரவாரம் செய்கின்ற வேங்கை மலர் போன்ற சுணங்கு.

### 2.3.3 விறலியரின் இயல்பு

இவ்வாறு, விறலியரின் கூந்தல், சாயல், நுதல், கண், பார்வை, எயிறு, முலை, தொடை, ஓதி, அடி, சுணங்கு ஆகியவை பல்வேறு உவமைகளால் விளக்கப்பட்டுள்ளன.

இத்தகு அழகு வாய்ந்த விறலியரின் மென்மையான இயல்பையும் புலவர் குறிப்பிடத் தவறவில்லை. விறலியர், முல்லை சான்ற கற்பும், மெல்லியல்பும், மான் நோக்கும், வாள் (ஒளி பொருந்திய) நுதலும் உடையவர் என்பதை,

முல்லை சான்ற கற்பின் மெல்லியல்

மடமான் நோக்கின் வாள்நுதல் விறலியர்

(அடிகள் 30, 31)

என்னும் அடிகள் சுட்டுகின்றன.

- கல்லாத இளைஞர்

மென்மைத் தன்மை உடைய விறலியர், பாலை நிலத்தின் கடும் வெப்பம், நடந்து வந்த களைப்பு முதலியவற்றால் வருந்திய அடிகளை உடையவர்களாக இருந்தனர். அவர்களுடைய மென்மையான பாதங்களை, தம் தொழிலைத் தவிர வேறு கல்வி அறிவு இல்லாத இளைஞர்கள் மென்மையாக வருடி, வலியைப் போக்கினர். இதனை,

நடைமெலிந்து அசைஇய நல்மென் சீறடி

கல்லா இளையர் மெல்லத் தைவர

(அடிகள் 32 – 33)

(அசைஇய = வருந்திய ; தைவர = வருட)

என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

## 2.3.4 பாலைப் பண்

பண் என்றால் இசை என்றும் யாழ் என்றும் பொருள் உண்டு. பாலை நிலத்துக்கு உரிய பண் பாலைப்பண் ஆகும். இப்பண்ணைச் சிறுபாணன் இசைத்து வருகிறான்.

பொன் கம்பி போன்று முறுக்கு மிக்க நரம்பின் இனிய ஓசையை உடைய சிறிய யாழை இடப்பக்கத்தில் தழுவி (வைத்து) இருக்கிறான் பாணன். அதில் நட்டபாடை என்னும் பண்ணை (பாலைப்பண்) இனிமையாக அவன் இசைக்கிறான்.

இங்ஙனம் சிறிய யாழில் இனிய இசையை இசைத்துக் கொண்டு, வாரி வழங்கும் வள்ளல்கள் இல்லாததால் பரிசிலர் இயங்காத இவ்வுலகில் தருவாரை எதிர்பார்த்து வழிநடந்த களைப்பைப் போக்குவதற்காக மர நிழலில் சிறுபாணன் இளைப்பாறினான் (ஓய்வெடுத்தான்).

## 2.4 தொகுப்புரை

கொடிது கொடிது வறுமை கொடிது. இக்கொடிய வறுமை கலைத்திறம் வாய்ந்த பாணர் கூட்டத்தை வாட்டுகிறது. இக் கூட்டத்தார் வழிநடைப் பயணமாகச் சென்ற பாலை நிலத்துக் கொடுமையும் அவர்கள் உற்ற துயரமும் சிறுபாணாற்றுப்படையில் காட்டப்படும் திறம் சிறப்பானது. மென்மைத் தன்மை மிக்க விறலியரின் அழகு நலனைப் புலவர் நயம்பட உரைப்பதும் உணர்ந்து இன்புறத்தக்கதாகும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 3

## D01133 சிறுபாணாற்றுப்படை – 3

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் சிறுபாணாற்றுப்படையின் 41 முதல் 113 அடிகளுக்கு உரிய விளக்கத்தைத் தருகிறது. நல்லியக்கோடனின் அருள் உள்ளம், இரக்க குணம், கொடைத் தன்மை ஆகியவற்றை நன்கு தெளிவுறுத்துகிறது. மூவேந்தர்கள் மற்றும் கடையெழு வள்ளல்களின் உயர்ந்த உள்ளத்தைச் சுட்டிக்காட்டி, அவர்களினும் மேலான உள்ளம் கொண்டவன் நல்லியக்கோடன் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- பாணர்களின் வறுமைத் துயரை உணரலாம்.
- யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் உயர்ந்த கொள்கை கொண்ட பாணர்களின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளலாம்.
- மூவேந்தர்களின் வள்ளல் தன்மையை விளங்கிக் கொள்ளலாம்.
- கடையெழு வள்ளல்களின் கொடை மேன்மையை அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

3.0 பாட முன்னுரை

3.1 வஞ்சி நகரின் சிறப்பு

3.2 மதுரை நகரின் சிறப்பு

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

3.3 உறந்தை நகரின் சிறப்பு

3.4 கடையெழு வள்ளல்கள்

3.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 3.0 பாட முன்னுரை

நல்லியக்கோடனிடம் பரிசுப் பொருள்களைப் பெற்று மீண்டு வருகிறான் ஒரு சிறுபாணன். அம்மன்னனிடம் தான் பெற்ற பரிசுப் பொருள்களின் மிகுதியை, வறுமையுற்ற பாணனிடம் அவன் வியப்புடன் கூறுகிறான். அப்பொழுது நல்லியக்கோடனின் வள்ளல் தன்மை, சேர, சோழ, பாண்டியர் மற்றும் கடையெழு வள்ளல்களின் வள்ளல் தன்மையை விட மேம்பட்டது என்று ஒப்பிட்டுக் கூறுகிறான். சிறுபாணாற்றுப்படையில் 41-113 அடிகளில் இடம் பெற்றுள்ள இச்செய்திகளை இப்பாடம் விவரிக்கிறது.

- மூவேந்தர்களும் சிறுபாணாற்றுப்படையும்

பழங்காலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஆட்சி செய்தனர். இம் மூவேந்தர்களின் தலைநகர்களாக முறையே வஞ்சியும், உறந்தையும், மதுரையும் விளங்கின. அவற்றின் சிறப்பை இந்நூல் 41-83 அடிகளில் சிறப்பித்துக் கூறுகிறது.

## 3.1 வஞ்சி நகரின் சிறப்பு

சேர மன்னர்களின் தலைநகரம் வஞ்சி ஆகும். இதன் சிறப்பினை 41-50 அடிகளில் இந்நூல் எடுத்துக் கூறுகிறது. சேர நாட்டின் வளம், அரசியல், மன்னன் குடிமக்களைக் காக்கும் சிறப்பு உள்ளிட்ட செய்திகள் இவ்வடிகளில் கூறப்பட்டுள்ளன.

### 3.1.1 நீர் வளமும் நில வளமும்

சேர நாடு வளம் மிக்கது. இந்நாட்டின்கண் ஐந்திணை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) வளமும் நிறைந்து விளங்கியது. இந்நாட்டில் எங்கும் மீன்கள் கொழுத்து விளையாடின. வளவிய இதழை உடைய செங்கழுநீர் மலரை எருமை மாடுகள் மேய்ந்தன. வயிறு நிறைய மேய்ந்த அம் மாடுகள் மிளகுக்கொடி படர்ந்த பலாமர நிழலில் படுத்துத் தூங்கின. அம்மாடுகளின் முதுகை மஞ்சள் செடிகள் தடவிக் கொடுத்தன. காட்டு மல்லிகைச் செடியாகிய படுக்கையின் மேல் அம்மாடுகள் கவலையில்லாது ஆழ்ந்து உறங்கின.

சேர நாடு நீர் வளமும் நில வளமும் நிரம்பியது என்பதை மேற்கண்ட செய்தி வெளிப்படுத்துகிறது. கொழுத்த மீன்கள் விளையாடுவது நீர் வளத்தைச் சுட்டுகிறது. சேர நாட்டுச் செல்வங்களுள் தலைசிறந்தது மிளகு. மிளகுக்கொடி, பலாமரம், காட்டு மல்லிகை, மஞ்சள் என்பன நில வளத்தைக் காட்டுகின்றன. இவ்வளத்தை,

கொழுமீன் குறைய ஒதுங்கி, வள்இதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்,
மஞ்சள் மெல்இலை மயிர்ப்புறம் தைவர,
விளையா இளங்கள் நாற, மெல்குபு பெயரா,
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலம்......................

(சிறுபாணாற்றுப்படை 41-46)

(கயவாய் = பெரியவாய் ; பைங்கறி = பசிய மிளகுக்கொடி; பலவு = பலாமரம் ; மயிர்ப்புறம் = மயிர் நிரம்பிய முதுகு ; இளங்கள் = முற்றாத தேன்; மெல்குபு = மென்று ; குளவிப்பள்ளி = காட்டு மல்லிகையாகிய படுக்கை ; பாயல்கொள்ளும் = உறங்கும்)

என்று புலவர் காட்சிப்படுத்துகிறார்.

### 3.1.2 அறமும் வீரமும்

சேரர்களின் ஆட்சியில் மனிதர்களே அன்றி விலங்குகள் கூட எவ்விதத் துன்பமும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ்வதாக இந்நூல் கூறுகிறது.

நாட்டில் எவ்வளவு வளம் இருந்தாலும் அதை அந்நாட்டில் வாழும் உயிரினங்கள் பெற்று இன்பமாக வாழ வழி வகை செய்வது அரசனின் திறம் ஆகும். அரசனின் அறம் தவறாத அரசியலும் எவருக்கும் அஞ்சாத அவனது வீரமும் சேரநாட்டு மக்களே அன்றி விலங்குகள் கூட மகிழ்வுடன் வாழ்வதற்குக் காரணமாயின.

அறநெறி தவறாமலும் வீர உணர்வுடனும் ஓர் அரசன் ஆட்சி செய்தால் அந்நாட்டில் உள்ள உயிரினங்கள் துன்பம் இல்லாமல் இன்பத்துடன் வாழும். இதன் குறியீடு தான் சேர நாட்டின் எருமை துயில் கொண்ட செய்தி.

## 3.2 மதுரை நகரின் சிறப்பு

பாண்டிய மன்னர்களின் தலைநகரம் மதுரை ஆகும். இதன் சிறப்பினை 51-67 அடிகளில் சிறுபாணாற்றுப்படை எடுத்துக் கூறுகிறது.

### 3.2.1 உமணர்

பாண்டி நாட்டில் கிடைக்கும் பொருள்களில் குறிப்பிடத்தக்கது முத்து ஆகும். சோழ நாடு சோறு உடைத்து என்பதுபோல, பாண்டி நாடு முத்து உடைத்து என்று கூறுவது வழக்கம். பாண்டி நாட்டு முத்துக்கு (கொற்கை முத்து) உலக அளவில் நல்ல வரவேற்பு இருந்தது.

பாண்டிய அரச மரபினர் பலரும் தமிழ் மொழி மீது மிகுந்த பற்று வைத்திருந்தனர். தமிழ்மொழி என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்று கருதினர். அதனால் முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களை ஏற்படுத்தினர். அச்சங்கங்கள் தமிழ் மொழியை வளர்த்தெடுப்பதில் முழுக் கவனம் செலுத்தின. அச்சங்கங்கள் ஆய்ந்த பழந்தமிழ் நூல்கள் பற்பல. ஆயினும் அவற்றுள் எண்ணில் அடங்காத நூல்கள் அழிந்து போயின.

சங்கம் கண்ட சிறப்பால் மதுரை மாநகரம் முழுவதும் தமிழ் மணம் கமழ்ந்தது என்று கூறலாம். இங்ஙனம், முத்தையும் முத்தமிழையும் ஒரு சேரப் பெற்ற பெருமைக்கு உரியது பாண்டிய மன்னனின் மதுரை நகரம் ஆகும்.

### 3.2.2 வணிகரும் வானரமும்

பாண்டிய நாட்டில் கிடைத்த மற்றொரு பொருள் உப்பு. கொற்கை மாநகர உப்பு வணிகர் உமணர். இவர்கள் உப்பு மூட்டைகளை வண்டிகளில் ஏற்றி ஊர்கள் தோறும் சென்று விற்பர். அப்பொழுது தம் மனைவி மக்களையும் உடன் அழைத்துச் செல்வர். அதுமட்டுமன்றித் தம் குழந்தைகளைப் போல வளர்த்த மந்தியையும் உடன் அழைத்துச் செல்வது உண்டு. அம்மந்தியை ஆடை, அணிகலன்கள் முதலியவற்றை அணிவித்து அலங்காரம் செய்து தம்முடன் அழைத்துச் செல்வர்.

அம்மந்திகள் அவர்தம் குடும்பத்தினருடனும் குழந்தைகளுடனும் முத்துகள் பெய்த கிளிஞ்சல் சிப்பிகளைக் கொண்டு கிலுகிலுப்பை (விளையாட்டுப் பொருள்) ஆட்டி மகிழும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.3 உறந்தை நகரின் சிறப்பு

சோழர்களின் தலைநகரங்களுள் ஒன்று உறந்தை ஆகும். இந்நகரின் சிறப்பினை 68-83 அடிகளில் இந்நூல் விரிவுபடக் கூறுகிறது.

- சோழர்கள்

தமிழகத்தின் கீழ்த் திசையில் அமைந்துள்ள நிலப் பகுதிகளைச் சோழ நாடு என்பர். அதனைப் பல காலமாக ஆட்சி செய்த மன்னர் மரபினர் சோழர்.

சோழர் மரபில் தோன்றிய செம்பியன் என்பவன் குடிமக்களின் நலம் காக்கும் வகையில், பகைவரின் தொங்கும் அரண்களை முற்றிலுமாக அழித்தான். அதனால் அவன் தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் என்று சிறப்பிக்கப் பெற்றான்.

### 3.3.1 நிலவளமும் மனவளமும்

‘சோழநாடு சோறு உடைத்து’ என்பது பழமொழி. இந்நாட்டின் சிறப்பு, நீர்வளம் நிறைந்த, குளிர்ச்சி உடைய வயல்கள். ஐவகை நிலங்களில் இதனை மருதம் என்று குறிப்பிடுவர்.

இந்நாட்டில் நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே சிறப்புற்று இருப்பதை, சிறுபாணாற்றுப்படை ஒரு நாடகத்தின் அழகுபட விவரிக்கிறது.

- நிலவளம்

சோழநாட்டில் ஒரு பொய்கை (நீர்நிலை) உள்ளது. அது நல்ல நீரை உடையது. அப் பொய்கையைக் கடப்ப மரங்கள் சூழ்ந்துள்ளன. அம்மரத்தில் மலர்கள் மாலைகள் போலத் தொங்குகின்றன. அம்மலர்களினின்றும் இந்திரகோபம் போன்ற தாதுக்கள் விழுகின்றன. இங்ஙனம் வீழ்வது ஓவியத்தை ஒத்து விளங்குகின்றது (இந்திர கோபம் = தம்பலப்பூச்சி).

இத்தகு வளம் பொருந்திய பொய்கைத் துறையிடத்தே, எழுகின்ற மார்பகத்தினை ஒத்த தாமரை மொட்டுகள் உள்ளன. அது சாதிலிங்கக் குழம்பு தோய்ந்த உள்ளங்கை போன்ற சிவந்த இதழ்களைக் கொண்டது. அழகிய முகம் போல அது மலர்ந்து இருக்கிறது. அதன் பொன் நிறமான பொகுட்டின் (மொட்டு) மீது தும்பி (வண்டு) தன் பெடையைத் தழுவிக் கொண்டு சீகாமரம் என்னும் பண்ணை (இசையை) இசைத்து மகிழ்கிறது.

- கொடைவளம்

செந்தமிழ் நாட்டு மூவேந்தர்களுடைய கொடைத் தன்மை, வெற்றிச் சிறப்பு, நாட்டு வளம் முதலியவற்றை, வறுமையில் வாடும் பாணனிடம் பரிசு பெற்ற பாணன் எடுத்துக் கூறுகிறான். அப்பொழுது இவர்களது வள்ளல் தன்மையைக் காட்டிலும் நல்லியக்கோடனின் வள்ளல் தன்மை மேம்பட்டது என்று அவன் புகழ்ந்து கூறுகிறான்.

## 3.4 கடையெழு வள்ளல்கள்

நல்லியக்கோடனின் வள்ளல் தன்மை மூவேந்தர்களின் வள்ளல் குணத்தைக் காட்டிலும் மிக்கிருப்பது போல, கடையெழு வள்ளல்களின் கொடைத் திறனைக் காட்டிலும் உயர்ந்தது என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. இச்செய்தி இந்நூலின் 84-113 அடிகளில் கூறப்பட்டுள்ளது. கடையெழு வள்ளல்களாவோர்:

1) பேகன்

2) பாரி

3) காரி

4) ஆய்

5) அதிகன் (அதியமான்)

6) நள்ளி

7) ஓரி

இனி, இவர்கள் செய்த அருங்கொடையைப் பற்றிக் காணலாம்.

### 3.4.1 பேகன்

இவன் குறுநில மன்னன். இம் மன்னனின் கொடைத்திறத்தை இந்நூல் (84-87 அடிகள்) குறிப்பிடுகிறது.

பருவ மழை தவறாது பெய்யும் வளம்மிக்க மலை நாட்டை உடையவன் பேகன். மயில் காட்டில் அகவியதை இவன் கேட்டான். குளிரால் நடுங்கியே மயில் அகவியது என்று எண்ணினான். அதன் மீது மிகுந்த இரக்கம் கொண்டான். அம் மயில் மீது தன் போர்வையைப் போர்த்தினான்.

இத்தகு அரிய கொடையால் இவன் அழியாப் புகழ் பெற்றான். இதனால் இவன்,

> கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
> ………… ……………. ……………. ……………….. …………….
> பெருங்கல் நாடன் பேகன்…
>
> (சிறுபாணாற்றுப்படை 85-87)

(கானம் = காடு; மஞ்ஞை = மயில்; கலிங்கம் = ஆடை; பெருங்கல் = மலை)

என்று குறிக்கப்பெறுகிறான்.

### 3.4.2 பாரி

பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன் பாரி. இம் மன்னனின் வள்ளல் தன்மையை இந்நூல் (87-91 அடிகள்) குறிப்பிடுகிறது.

சுரும்புகள் (வண்டுகள்) உண்ணுமாறு தேன் வழங்கும் சிறப்பு உடைய சுரபுன்னைகள் நிறைந்த வழிப்பாதை, அப்பாதையின் வழியே பாரி தன் தேர் மீது ஏறிச் சென்றான். அப்பாதையில், சிறிய பூக்களை உடைய முல்லைக் கொடி பற்றிப் படர்வதற்குக் கொழுகொம்பு இல்லாமல் தவித்தது. இதைக் கண்ட பாரி தான் ஏறி வந்த தேரை அவ்விடத்தில் நிறுத்தினான். அதில் முல்லைக் கொடியைப் படரவிட்டான். இத்தகு இரக்கக் குணம் கொண்டவன் பாரி. இதனால் இவன்,

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
................ .................. .......................
பறம்பின் கோமான் பாரி

(சிறுபாணாற்றுப்படை – 89-91)

(வீ = பூ; பறம்பு = பறம்பு மலை; கோமான் = அரசன்)

என்று பாடப் பெறுகிறான்.

### 3.4.3 காரி

அருள்மொழி மிக்கவன். ஒளி மிக்க அச்சம் தரும் நீண்ட வேலினை உடையவன். தடக்கையையும் (பெரிய கை), காரி என்ற குதிரையையும் உடையவன். இம்மன்னனின் கொடைத்திறத்தை இந்நூல் (91-95 அடிகள்) குறிப்பிடுகிறது.

உலகமே வியக்கும் வகையில் போரில் புகழ்மிக்க தன் குதிரையையும், பெரும் பொருளையும் இரவலர்க்குக் கொடுத்தான். இதனால் இவன்,

ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த
.......................... ................. ........
கழல்தொடித் தடக்கைக் காரி ...

(சிறுபாணாற்றுப்படை
93-95)

என்று சிறப்பிக்கப்படுகிறான்.

### 3.4.4 ஆய்

இவன், பொதிய மலையினிடத்து உள்ள ஆய் குடியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன். அதனால் ஆய் என்னும் பெயர் ஏற்பட்டதாகச் சிலர் கூறுவர். வேள் ஆய், ஆய் அண்டிரன் என்னும் பெயர்களாலும் இவன் அழைக்கப்படுகிறான். இவனைப் பற்றிய செய்திகள் இந்நூலில் 95-99 அடிகளில் இடம் பெற்றுள்ளன.

இவன் வலிமையான தோள்களை உடையவன்; இனிய மொழிகளைப் பிறரிடத்துப் பேசி மகிழ்பவன். பெறுவதற்கு அரிய சிறந்த மணியையும், ஆடையையும் இவன் பெற்றிருந்தான். சிவபெருமான் மீது கொண்டிருந்த பேரன்பால் அவற்றை அவ் இறைவனுக்குக் கொடுத்து மகிழ்ந்தான். இவன், ஆர்வ நன்மொழி ஆய் என்று அழைக்கப்படுகிறான்.

### 3.4.5 அதிகன்

இம்மன்னன் அதியர் என்னும் குடியில் பிறந்தவன் என்று கூறுவர். அதியன்,

அதிகமான், அதியமான், நெடுமான் அஞ்சி, அஞ்சி என்னும் பல பெயர்கள் இவனுக்கு உண்டு. இவனது அரிய கொடைத்திறம் பற்றி இந்நூலின் 99-103 அடிகளில் கூறப்பட்டுள்ளது.

- அதிசய நெல்லிக்கனி

அதிகன், ஒருமுறை வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குச் சென்றான். அங்கு உள்ள மலைச்சாரலில் மருத்துவத் தன்மை உடைய நெல்லி மரத்தில் ஒரே ஒரு பழம் பழுத்துத் தொங்கியது. அதை அதிகன் பறித்து வந்தான். அக்கனியை உண்போர் நீண்ட நாள் உயிர் வாழ்வர் என்பதை இவன் அறிந்து கொண்டான். அத்தகு சீரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஒளவையாருக்கு வழங்கினான் (ஒளவையார் சங்க காலத்து மிகச் சிறந்த பெண் புலவர்). இச்செய்தியை,

அமிழ்துவிளை தீம்கனி ஒளவைக்கு ஈந்த
……………… …………………… …………….. ………..
அரவக் கடல்தானை அதிகனும்…
(சிறுபாணாற்றுப்படை 101-103)

(அமிழ்து விளை = இறவாமை தரும்; தீம் = இனிய; அரவம் = ஒலி ; தானை = சேனை)

என்று இந்நூல் சுட்டுகிறது.

## 3.4.6 நள்ளி

வளம் செறிந்த கண்டீர நாட்டைச் சேர்ந்தவன் நள்ளி. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதும், உள்ளத்தில் கருணை இல்லாமல் பிறர்க்கு ஈதலும் (கொடுத்தல்) பயன் தராது என்ற கொள்கை உடைய இம்மன்னனின் வள்ளல் தன்மையைச் சிறுபாணாற்றுப்படை 103-107 அடிகளில் சுட்டுகிறது.

முட்டாது கொடுப்போன்

தன்னிடம் வந்த இரவலர்கள் மனம் மகிழ்கின்ற வகையில் பரிசுப்பொருள்களை அள்ளிக் கொடுப்பவன் இவன்.

தன்னிடம் வந்தவர்கள் மீண்டும் வறுமையில் வாடாதவாறும் வேறொருவரிடம் சென்று இரவாதவாறும் நிரம்பக் கொடுக்கும் இயல்பு உடையவன் நள்ளி. இதனால் இவன்,

முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கை
………… ……….. ………………… ……………….
நளிமலை நாடன் நள்ளி…
(சிறுபாணாற்றுப்படை 105-107)

(முட்டாது = தடையில்லாது; முனை = போர்முனை; நளிமலை = குளிர்ந்த மலை)

என்று பாராட்டப்படுகிறான்.

### 3.4.7 ஓரி

சிறிய மலைகளை உடைய கொல்லி மலைக்குத் தலைவன் ஓரி. இவன் ஓரி என்னும் புகழ்மிக்க குதிரையை உடையவன். காரி என்னும் புகழ்மிக்க குதிரையை உடைய காரியுடன் இவன் போரிட்டுப் பல முறை வென்றான். இறுதியில் சேரனின் துணைபெற்று இவனுடன் போரிட்ட காரி இவனைக் கொன்றான். இவ் வள்ளல் பற்றிச் சிறுபாணாற்றுப்படையின் 107-111 அடிகள் குறிப்பிடுகின்றன.

நறும்போது கஞலிய நாகு முதிர் நாகத்துக்
குறும்பொறை நல்நாடு கோடியர்க்கு ஈந்த
………… …………. ……………. ……………….
ஓரிக் குதிரை ஓரி………

புன்னை மரங்களையும் குன்றுகளையும் உடைய நாடுகளைக் கூத்தருக்குக் கொடுத்த ஓரி என்று இந்நூல் அவனைப் புகழ்கிறது.

## 3.5 தொகுப்புரை

நல்லியக்கோடனிடம் பரிசு பெற்று வந்த சிறுபாணன் பரிசு பெற விரும்பும் சிறுபாணனிடம் நல்லியக்கோடனின் கொடைச் சிறப்பை வியந்து கூறுகிறான். அவனது கொடைத்திறம் சேர, சோழ, பாண்டியர்களின் கொடையைக் காட்டிலும் மேலானது; கடையெழு வள்ளல்களின் அருங்கொடையை விட உயர்ந்தது என்று மகிழ்ந்து கூறுகிறான்.

"உன்னைப் போல் நானும் வறுமையில் வாடினேன்; செய்வது தெரியாமல் விழித்தேன். நல்லியக்கோடனிடம் சென்று பரிசு பெற்றமையால் என் வறுமைத் துன்பம் முற்றிலும் நீங்கியது. எனவே, நீயும் அவ்வள்ளலிடம் சென்று பரிசு பெற்று, துயர் நீங்குவாயாக" என்று பரிசு பெற்ற பாணன் வறுமையில் வாடும் பாணனை வழிப்படுத்துகிறான்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 4

## D01134 சிறுபாணாற்றுப்படை – 4

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் சிறுபாணாற்றுப்படையின் 114 முதல் 202 வரை உள்ள அடிகளுக்கு உரிய விளக்கத்தைத் தருகிறது. நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பும், பாணனின் வறுமையும் செல்வ நிலையும் பற்றிக் கூறுகிறது. பாணன் செல்லும் வழியில் உள்ள எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய நகரங்கள் பற்றிய செய்திகளை விளக்கிக் கூறுகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பை அறியலாம்.
- மாவிலங்கை பற்றி விளங்கிக் கொள்ளலாம்.
- பாணனின் கொடிய வறுமை பற்றித் தெரிய வரும்.
- பரிசு பெற்று வறுமை நீங்கிய பாணனின் செல்வ நிலை புலனாகும்.
- எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் நகர மக்களின் விருந்தோம்பல் திறம் தெரிய வரும்.

# பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை

4.1 நல்லியக்கோடனின் தலைமை

4.2 பாணரின் வறுமையும் செல்வமும்

தன் மதிப்பீடு : வினாக்கள்- I

4.3 பாணனுக்கு வழிகாட்டுதல்

4.4 தலைநகர்ச் சிறப்பு

4.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 4.0 பாட முன்னுரை

அன்பு நிறை மாணவர்களே! நீங்கள் இப்பாடத்தில் நல்லியக்கோடனின் தலைமைச் சிறப்பு, பாணர்களின் வறுமை, பரிசில் பெற்ற பின்பு அவர்களது செல்வ நிலை, கிடங்கிலுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய இடங்களில் பாணனுக்கு வழங்கப்படும் விருந்துகள் முதலிய செய்திகளைப் படிக்க இருக்கின்றீர்கள். இச்செய்திகள் சிறுபாணாற்றுப்படையில் 114 முதல் 202 வரை உள்ள அடிகளில் அமைந்துள்ளன.

## 4.1 நல்லியக்கோடனின் தலைமை

கடையெழு வள்ளல்களின் வள்ளல் தன்மையைக் காட்டிலும் மிக்க வள்ளல் தன்மை கொண்டவன் ஓய்மா நாட்டை ஆண்ட குறுநில மன்னன் நல்லியக்கோடன். இதனை முந்தைய பாடத்தில் படித்தீர்கள்.

இம்மன்னன் வலிமை பொருந்திய ஓவியர் குடியில் பிறந்தவன். இவன் முன்னோர்களான ஓய்மான் நல்லியாதன், ஓய்மான் வில்லியாதன் ஆகிய இருவரும் வள்ளல்களாகத் திகழ்ந்தனர்.

### 4.1.1 மாவிலங்கை

நல்லியக்கோடன் பெருமாவிலங்கைத் தலைவன் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறான். இவன் ஆட்சிக்கு உட்பட்ட ஊர்களாக மாவிலங்கை, எயில்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகியவை கூறப்பட்டுள்ளன. ஆயினும், பெருமாவிலங்கைத் தலைவன் என்றே பெரிதும் சிறப்பித்துக் கூறப்படுகிறான். எனவே, மாவிலங்கை இவனது தலைநகரம் என்று கருதலாம். இதற்குக் கிடங்கில் என்று சொல்லவும் பெறும்.

இந்த மாவிலங்கை வளம் மிக்க நாடு. இவ்வூரில் பெருக்கெடுத்து ஓடுகின்ற நீரின்கண் மகளிர் விளையாடி மகிழ்வர். இப்பெண்கள் நீரில் நீந்தி விளையாடுவதற்குத் தெப்பக்கட்டைகளாக அகில், சந்தனம், சுரபுன்னை ஆகிய மரக்கட்டைகளைப் பயன்படுத்துவர் (தெப்பக் கட்டை = நீரில் மிதக்கும் கட்டை). இப்பெண்களுக்கு இம் மரக்கட்டைகளை ஓடி வருகின்ற நீரோட்டமே கொண்டு வந்து சேர்க்கும்.

நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்

துறையாடு மகளிர்க்குத் தோள்புணை ஆகிய

பொருபுனல் தரூஉம்

(அடிகள். 116-118)

இத்தகு வளமும் பெருமையும் புகழும் கொண்ட நாடு மாவிலங்கை (பெரிய இலங்கை). இதனை ஆட்சி செய்த பல மன்னர்களுள் இவன் தலைசிறந்தவன் ஆவான்.

இங்குக் கூறப்படும் இலங்கை வேறு; இராவணன் ஆண்ட இலங்கை வேறு. இலங்கை என்னும் பெயர் கொண்ட ஊர்கள் தமிழகத்தில் பல இருந்தன.

### 4.1.2 வீரமும் கொடையும்

நல்லியக்கோடன் வீரத்திலும் கொடையிலும் சிறந்தவன்.

- வீரம்

நல்லியக்கோடன் வீரம் மிக்கவன். பகைவரை மார்பிலும் முகத்திலும் வெட்டி வெற்றி கொள்ளும் வீரம் நிறைந்தவன். புலி போன்ற வலிமை உடையவன். இதனை வடுவில் வாய்வாள், உறுபுலித் துப்பின் என்னும் சொற்கள் சுட்டிக்காட்டுகின்றன.

- கொடை

இவன் மழை மேகம் போன்று பலனை எதிர்பார்க்காது வாரி வழங்கும் கொடைத் திறம் மிக்கவன். இதனை, பிடிக்கணம் சிதறும் பெயல்மழைத் தடக்கை என்ற அடி சுட்டுகின்றது.

மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்
. . . . . . . . . . . . . . . . . .
பிடிக்கணம் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடன்....

(அடிகள் 121-126)

## 4.2 பாணரின் வறுமையும் செல்வமும்

நல்லியக்கோடனின் வீரம், செல்வம், பெருமை முதலானவற்றைப் பாடிப் பரிசில் பெற்ற பாணன் தனது முந்தைய வறுமை நிலையைப் பரிசு பெறச் செல்லும் பாணனிடம் எடுத்துக் கூறுகிறான். மேலும் பரிசு பெற்ற பிறகு தான் அடைந்த செல்வ நிலையையும் அவனிடம் விளக்கிக் கூறுகிறான். இச்செய்திகளை 126 முதல் 140 வரை உள்ள அடிகள் தெளிவுபடக் கூறுகின்றன.

### 4.2.1 பாணனின் வறுமை

தமிழ்ப் புலவர்கள் வறுமையில் வாடியதைப் பலரும் அறிவர். அதனால் புலமையும் வறுமையும் பிரிக்க முடியாதன என்ற சொல் வழக்கு ஏற்பட்டது. இவ்வறுமைக்கு இந்நூலில் வருகின்ற பாணனும் விதிவிலக்கு அல்லன். இவ்வறுமை கொடிதினும் கொடிதானது. சிறுபாணாற்றுப்படை கூறும் வறுமையைப் பாருங்கள்.

- ஆம்பி பூத்தது

> திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
> கறையான் பால்முலை கவர்தல் நோனாது
> புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்
> காழ்சோர், முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
> பூழி பூத்த புழல்கால் ஆம்பி
> (அடிகள் 130-134)

ஆம்பி என்றால் காளான் என்று பொருள். பாணன் வீட்டில் அடுப்புப் பற்ற வைத்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. இதனால் அடுக்களையில் (அடுப்பில்) காளான் முளைத்திருந்தது. இதனை அடுக்களை ஆம்பி பூத்தது என்ற அடி சுட்டுகிறது. தீ மூட்டிப் பல நாட்கள் ஆன அடுப்பில் நாய் ஒன்று குட்டிகளைப் பெற்றெடுத்தது. அந்த நாய் தன் குட்டிகள் மீது மிகுந்த அன்பும், பாசமும், பற்றும் வைத்திருந்தது. ஆனாலும் பிறந்து சில பொழுதே ஆன – கண்களைத் திறந்து பார்க்காத தன் இளம் குட்டிகளுக்குத் தேவையான பால் அந்நாயிடத்தில் இல்லை. அதனால் பால் குடிக்க வந்த தன் இளம் குட்டிகளைப் பால் கொடுக்காது துரத்தியது. அதனையும் மீறி நாய்க்குட்டிகள் தாயின் பால் மடியைப் பற்றி இழுத்தன. வலி தாங்காது நாய் அலறித் துடித்தது. இத்தகைய வீட்டில் கொடிய வறுமையில் நான் வாடினேன் என்று பரிசில் பெற்ற பாணன் வறுமையில் வாடும் பாணனிடம் கூறினான்.

### 4.2.2 பாணனின் வீடு

பாணன் மட்டும் வறுமையில் வாடவில்லை. அவனது வீடும் வறுமையை வெளிச்சம் போட்டுக் காட்டியது. வறுமையில் வாடிய பாணனின் வீட்டை ஒளிப்படக் காட்சியாக நம் கண்முன் கொண்டு வந்து காட்டுகிறார் நல்லூர் நத்தத்தனார்.

அக்காட்சி இது:

- உணவு சமைப்பதற்குத் தேவையான அரிசி உள்ளிட்ட பொருள்கள் இல்லாது அடுக்களை வெறிச்சோடிக் கிடந்தது.
- மிகவும் பழைமையானதும் சிதைந்ததுமான வீட்டுச் சுவர். இதில் கறையான் புற்றுக்

கிளம்பி இருந்தது.

- வீட்டுக் கூரையில் இருந்த கழிகள் (மூங்கில்கள் – வீடுகட்டப் பயன்படும் மரம்) கட்டுகள் அறுந்து கீழே விழுந்தன.

- மனைவி

பாணனின் மனைவியின் வறுமைக் கோலத்தைப் பாருங்கள்.

பசியால் இளைத்த உடலை உடையவள்.

வயிறு ஒட்டிக் கிடந்தது.

கைகளில் வளையல்களைத் தவிர வேறு அணிகலன்கள் எதுவும் இல்லை.

- வறுமையிலும் செம்மை

பசித் துன்பம் வாட்டியதால் தன் வீட்டுக் குப்பையில் தானாகவே முளைத்துக் கிடந்த வேளைக் கீரையைப் பறித்து வந்தாள். தன் கை நகங்களினால் கிள்ளி வேக வைத்தாள். பணச்செலவு இல்லாமல் கிடைத்த அந்த கீரைக்கு இட வேண்டிய உப்புக்கூட அந்த வீட்டில் இல்லை. எனவே, உப்பில்லாமலேயே வெந்த கீரையை உண்ண அவ்வீட்டில் உள்ள பலரும் காத்திருந்தனர்.

வறுமையிலும் செம்மை என்பது போல, தன் குடும்ப வறுமை வெளியில் எவருக்கும் தெரியாதவாறு வீட்டு வாயில் கதவை மூடினாள்; உப்பில்லாமல் சமைத்த வெந்த கீரையை அனைவரும் உண்டனர்; இவ்வாறு வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோம் என்ற வறிய சூழலில் பாணனின் குடும்பம் இருந்தது.

ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்கில்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம்....
(அடிகள் 135-140)

### 4.2.3 பாணனின் செல்வம்

இந்நிலையில்தான் எங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு நல்லியக்கோடனிடம் சென்றோம். அவன் எங்களுக்குச் சுவையான உணவு படைத்து எங்கள் கடும்பசியைப் போக்கினான். இக்கொடிய பசி மீண்டும் வந்து எங்களுக்குத் துன்பம் தராத வகையில் மிகுந்த செல்வத்தையும், யானைகளையும், தேர்களையும் பரிசாக அள்ளி வழங்கினான். இத்தகைய வள்ளலின் அரண்மனையில் இருந்து இப்பொழுது நாங்கள் வந்து கொண்டு இருக்கிறோம்.

சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம்அவண் நின்றும் வருதும்....

(அடிகள் 142-143)

### நீங்களும் செல்க

வறுமையில் வாடும் பாணனே! கொடிய வறுமையைப் போக்கும் நல்லியக்கோடனிடம் நீயும் செல்க. நீயும் உனது சுற்றமும் தயங்காமல் அம்மன்னனிடம் செல்லுங்கள். அங்ஙனம் சென்றால், “அவன் உங்களை அன்போடு வரவேற்பான். பரிசுப் பொருள்கள் பலவற்றை வழங்கி உங்கள் துன்பத்தைப் போக்குவான். எனவே தயங்காமல் செல்லுங்கள்” என்று பரிசு பெற்ற பாணன் வறிய பாணனை வழிப்படுத்தினான். இச்செய்திகள் 142 முதல் 163 வரையிலான அடிகளில் நாடகக் காட்சிபோல வருணிக்கப்படுகின்றன.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

# 4.3 பாணனுக்கு வழிகாட்டுதல்

வள்ளல் நல்லியக்கோடனின் தலைநகரம் ஓய்மா நாட்டில் இருந்த கிடங்கில் என்னும் ஊர். வறுமையுற்ற பாணனை அவ்வூருக்கு ஆற்றுப்படுத்துகிறான் (வழி கூறுகிறான்) பரிசு பெற்ற பாணன். தலைநகரான கிடங்கில் என்னும் ஊருக்குச் செல்லும் வழியில் எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய நகரங்கள் உள்ளன. இந்நகரங்களும் இம்மன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளே ஆகும்.

இந்நகரங்களில் வாழ்ந்து வரும் மக்கள், அவர்தம் பழக்க வழக்கங்கள், நில அமைப்பு, மக்கள் அன்போடு அளிக்கும் விருந்து (உணவு) முதலானவை மிகத் தெளிவாகவும் சுவையாகவும் கூறப்பட்டுள்ளன. இந்நகரங்களைப் பற்றிய இச்செய்திகள் மிக விரிவாக 143 முதல் 195 வரையிலான அடிகளில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

## 4.3.1 எயிற்பட்டினம்

எயில் = மதில், பட்டினம் = கடற்கரை நகரம். மதில் நகரம் அல்லது கோட்டை நகரம். அதாவது கோட்டைகள் சூழ்ந்த கடற்கரைப் பட்டினம் என்பது பொருள். இவ்வூரின்கண், நீலவானத்தை ஒத்த அழகிய கடல் உள்ளது. இதன் கடற்கரையில் தாழை மலரானது அன்னம் போன்று மலர்ந்தது; செருந்தி பொன்போல் பூத்தது; புன்னை மரம் முத்துக்கள் போல் அரும்பெடுத்தது; கரையிடத்து உள்ள வெள்ளிய மணல் பரப்பில் கடல் பரந்து ஏறுகின்றது. இத்தகைய நெய்தல் நிலத்தின் வழிநெடுக உப்பங்கழிகள் சூழ்ந்த ஊர்கள் உள்ளன. இக்காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தவாறே சென்றால் மதில்களால் சூழப்பட்டதும் பொய்கைகள் நிறைந்ததுமான எயிற்பட்டினத்தை அடையலாம் என்று பரிசு பெற்ற பாணன் வறிய பாணனிடம் கூறினான்.

- விருந்து

எயிற்பட்டினத்தில் கடல் அலைகள் கொண்டு வந்து ஒதுக்கிய அகில் மரக் கட்டைகள் உறங்குகின்ற ஒட்டகங்கள் போன்று கிடந்தன. அத்தகைய அகில் மர விறகினால் தீ மூட்டிக் காய்ச்சி அரித்த (வடிகட்டிய) தேறலை (கள்) மீனவப் பெண்கள் மீனவர்களுக்கு உணவாகக் கொடுப்பர். விறலியரோடு செல்லும் நீங்கள் கிடங்கில் கோமானைப் (நல்லியக்கோடனை) பாடியும் குழல் ஓசைக்கு ஏற்ப ஆடியும் செல்லும் பொழுது அப்பரதவரின் வீடுகள் தோறும் அவர்கள் மகிழ்ந்து கொடுக்கும் குழல் மீன் சூட்டைப் (ஒரு வகை சுட்ட மீன்) பெற்று உண்டு மகிழலாம்.

இச்செய்திகள் 146 முதல் 163 வரையில் உள்ள அடிகளில் சுவைபடக் கூறப்பட்டுள்ளன.

## 4.3.2 வேலூர்

பாணனே, நெய்தல் பட்டினமாகிய (கடற்கரை நகரம்) எயிற்பட்டினத்தைக் கடந்து சென்றால், முல்லை நிலப் பகுதி (காடுகள் நிறைந்தது) வழியிடை வரும். அப்பகுதியில் அமைந்துள்ள வேலூரை அடையலாம்.

- வேலூரின் வளம்

வேலூர் வளம் நிறைந்த ஊர். அவரைக்கொடி பவழம் போல் பூத்து விளங்கும். கருமையான நிறம் கொண்ட காயாம் பூக்கள் மயிலின் கழுத்துப் போன்று மலர்ந்திருக்கும்.

முசுண்டைச் செடியில், பனை ஓலையால் பின்னப்பட்ட கொட்டம் (சிறு பெட்டி) போன்று பூக்கள் மலர்ந்திருக்கும். செங்காந்தள் மலர்கள் கைவிரல்கள் போன்று பூத்திருக்கும். செல்லும் வழிகள் எல்லாம் இந்திர கோபம் எனும் பூச்சிகள் ஊர்ந்து செல்லும். முல்லைக் கொடிகள் படர்ந்து கிடக்கும் அழகிய காட்டிடத்தே மலைகளில் இருந்து அருவிகள் வீழ்ந்தோடும் வளம் மிக்க ஊர் வேலூர்.

- விருந்து

பாணனே! இத்தகைய முல்லை நிலப்பகுதி வழியாக, பகல் பொழுதில் சென்று கொண்டே இருந்தால் மாலைப் பொழுதில் வேலூரைச் சென்று அடையலாம். அங்கு, உள்ளேயிருப்போரை வருத்தும் வெப்பம் மிகுந்த குடிலில் (குடில் – வீடு) முல்லை நில மக்களாகிய எயினர்கள் இருப்பர். அக்குலப் பெண்கள் (எயிற்றியர்) தாங்கள் சமைத்த மான் இறைச்சி கலந்த புளியஞ்சோற்றை உனக்கு வழங்குவார்கள். அவ்விருந்தையும் நீ உண்டு மகிழலாம்.

இச் செய்திகள் 164 முதல் 177 வரையிலான அடிகளில் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளன.

### 4.3.3 ஆமூர்

சிறுபாணனது வழிகாட்டுதலில் முதலில் நெய்தல் நிலத்து எயில்பட்டினமும், அதனை அடுத்த முல்லை நிலத்து வேலூரும் கூறப்பட்டன. அதனை அடுத்து வயல்கள் நிறைந்த மருத நிலப் பகுதியில் அமைந்துள்ள ஆமூர் வழியிடைத் தோன்றும் என்பது விவரிக்கப்படுகிறது.

- ஆமூரின் வளம்

நீர் வளமும், நில வளமும், நெல் வளமும் நிரம்பப் பெற்ற ஊர் ஆமூர் ஆகும். அவ்வூரின்கண் பூமாலைகள் கட்டித் தொங்க விடப்பட்டதைப் போன்று பூங்கொத்துகள் தொங்கும் காஞ்சி மரங்கள் வளர்ந்தோங்கி நிற்கும். அம்மரத்தின் கிளைகளில் தங்களுக்கு உணவாகும் மீன்களை எதிர்பார்த்து, சிச்சிலிப் பறவைகள் அமர்ந்து இருக்கும்.

அப்பறவைகளால் கிழிக்கப்பட்ட இலைகளையும், நீண்ட தண்டினையும் கொண்ட தாமரையினின்றும் மொட்டுகள் அவிழ்கின்றன. மலர்ந்த தாமரை மலரின் தேனை உண்ண வண்டுகள் வந்து குவிந்துள்ளன. தேனை உண்ண வந்த வண்டுகளின் வரிசை தாமரை மலரை மொய்த்துள்ளமை நிலவை விழுங்க வந்த கரும்பாம்பு போல் உள்ளது என்று நத்தத்தனார் உவமை நயம்படக் கூறுகிறார். பாணனே! இக்காட்சியை எல்லாம் பார்த்துக் கொண்டே சென்றால் ஆமூர் வந்து சேரும்.

- விருந்து

ஆமூர் குளிர்ந்த வயல்களை உடையது; சான்றோர்களை உடையது; மிக்க காவலைக் கொண்டது; பெரிய வீடுகளை உடையது; ஆழமான அகழிகளைக் கொண்டது. இத்தகைய வளம் மிக்க ஊரில் மருதநில மக்களாகிய உழவர்களும் உழத்திகளும் வாழ்ந்து வருகின்றனர்.

உழவர்கள் வலிமையான எருதுகளை உடையவர்கள். உழத்தியர், பெண் யானைகளின் துதிக்கையைப் போன்ற பின்னல் கிடக்கும் முதுகினையும், வளையல்

அணிந்த கையினையும் உடையவர்; இவர்கள் தங்கள் இல்லத்தின் உள்ளே இருந்துகொண்டு தங்கள் மக்களால் உன்னையும் உன் சுற்றத்தையும் அன்புடன் வரவேற்பர். மருத நில வாழ் மக்கள் விருந்து உபசரிப்பதில் தலைசிறந்தவர்கள். ஆதலால், உழத்தியர் வெண்மையான அரிசிச் சோற்றை நண்டின் கறியுடன் சேர்த்து உங்களுக்கு விருந்து அளிப்பர். இச் சோற்றை உண்டு மகிழலாம்.

இச்செய்திகள் 178 முதல் 195 வரையிலான அடிகளில் அழகு நயம்படக் கூறப்பட்டுள்ளன.

## 4.4 தலைநகர்ச் சிறப்பு

எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய நகரங்களைக் கடந்து சென்றால் நல்லியக்கோடனின் தலைநகரமான கிடங்கிலை அடையலாம். ஆமூருக்கு மிக அருகில்தான் கிடங்கில் உள்ளது. ஆங்கே விழாக்கள் எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

இதன் காரணமாக இவ்வூர் முழுவதும் புழுதி பறந்து புகை மூட்டமாக இருக்கும். வீரம் செறிந்த யானைகளின் மதநீர் அருவி போல ஓடுவதால் ஓயாத விழாக்களால் ஏற்பட்ட புழுதி அடங்கிப் போகும்.

இந்த யானைகளைப் பற்றி, நத்தத்தனார் கூறுவதைப் பாருங்கள்: போர்க்களத்தில் தான் கொன்ற பிணங்களைக் காலால் இடறுவதால் இரத்தம் தோய்ந்து சிவந்து தோன்றும் கால்களை உடையனவாக இந்த யானைகள் நிற்கும். யானைகளின் கால் நகங்கள் எவ்வாறு இருந்தன என்பதற்கு ஓர் உவமை காட்டுகிறார் புலவர். தீப்பிழம்பு சாய்ந்தது போன்ற நாக்கு, விளங்கும் பற்கள், வெள்ளாட்டுக் குட்டிகளை அணிகலனாக அணிந்துள்ள செவி, பிளவுபட்ட அடி ஆகியவற்றை உடைய பெண் பேய் நிணம் தின்று சிரித்தபோது தெரிந்த பற்களைப் போன்று அவை குருதி தோய்ந்து இருந்தனவாம்.

இத்தகு விழாக்கோலம் நிறைந்தது நல்லியக்கோடனின் தலைநகரம். இச்செய்திகளை 196 முதல் 202 வரையிலான அடிகள் கூறுகின்றன.

## 4.5 தொகுப்புரை

மாணவர்களே! இப்பாடத்தின்கண் கூறப்பட்டுள்ள செய்திகளை, நல்லியக்கோடனின் பெருமை, புகழ், வள்ளல் தன்மை, நெய்தல் நில நகரமான எயிற்பட்டினம், முல்லை நில நகரமான வேலூர், மருத நில நகரமான ஆமூர் ஆகியவற்றின் சிறப்புகள், இப்பகுதிகளில் பாணனுக்கு வழங்கப்படும் விருந்துகள் என்ற வகையில் வரிசைப்பட நினைவில் கொள்ளுங்கள்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 5

# D01135 சிறுபாணாற்றுப்படை – 5

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் நல்லியக்கோடனின் அரண்மனைச் சிறப்பை எடுத்துக் கூறுகிறது. சான்றோர், போர் வீரர், அரிவையர், பரிசிலர் ஆகியோர் இம்மன்னனைப் புகழ்ந்து கூறுவதை விவரிக்கிறது. பாணனது சீறி யாழின் சிறப்பு, நல்லியக்கோடன் வழங்கும் பரிசில்களின் சிறப்பு முதலான செய்திகளை விளக்கிக் கூறுகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- நல்லியக்கோடனின் அரண்மனைச் சிறப்பை அறியலாம்.
- நல்லியக்கோடனின் புகழினையும் தன்மையையும் புரிந்து கொள்ளலாம்.
- பாணர்களின் யாழ்ச் சிறப்பையும், பாடல் சிறப்பையும் உணரலாம்.

# பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை

5.1 நல்லியக்கோடனின் புகழ்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

5.2 யாழின் சிறப்பு

5.3 வள்ளல்

5.4 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 5.0 பாட முன்னுரை

அன்பிற்கினிய மாணவர்களே! நல்லியக்கோடனிடம் தான் பெற்ற பரிசின் சிறப்பை வறுமையில் வாடிய பாணனிடம் வியந்து கூறினான் பரிசு பெற்ற பாணன். அது மட்டுமன்றித், தனக்குப் பரிசு வழங்கிய நல்லியக்கோடனின் அரண்மனைக்குச் செல்வதற்கு உரிய வழிகளையும் அவன் கூறினான். இச் செய்திகளை முந்தைய பாடத்தில் விளக்கமாகப் படித்தீர்கள். இப்பாடத்தின்கண் நல்லியக்கோடனின் அரண்மனைச் சிறப்பு, மன்னனைப் பலரும் புகழ்ந்து கூறுதல், மன்னன் இரவலர்க்குப் பரிசு வழங்கும் சிறப்பு உள்ளிட்ட செய்திகளை விரிவாகப் படிக்க இருக்கிறீர்கள். இச்செய்திகள் சிறுபாணாற்றுப்படையில் 203 முதல் 269 அடிவரை உள்ள பகுதியில் அமைந்துள்ளன.

- நல்லியக்கோடனின் அரண்மனை

நல்லியக்கோடனின் அரண்மனை பெரிய மேரு மலையைப் பெயர்த்து வைத்தது போன்று காட்சி அளித்தது. அந்த அரண்மனையின் வாயில் கதவு திறந்து இருந்த காட்சி மேரு மலையானது கண் ஒன்றைத் திறந்து வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று இருந்தது. இம்மன்னனிடம் பரிசு பெற விருப்பமுடன் வரும் பொருநர், புலவர், அருமறை அந்தணர் போன்றோர் தங்குதடையின்றி உள்ளே வருவதற்கு வசதியாக அரண்மனையின் வாயில் கதவு எப்பொழுதும் மூடப்படாமல் திறந்தே இருக்கும். இதை அடையா நெடுங்கதவம் என்று சிறப்பித்துக் கூறுவர் (அடையா வாயில் – அடி 206).

# 5.1 நல்லியக்கோடனின் புகழ்

சிறந்த பண்புகளைத் தன்னகத்தே கொண்ட இம் மன்னனைச் சான்றோர், போர் வீரர், அரிவையர், பரிசிலர் ஆகியோர் புகழ்ந்து கூறுகின்றனர். இவர்களின் புகழ் மொழியைத் தொடர்ந்து நோக்கலாம்.

## 5.1.1 சான்றோர் புகழ்தல்

நன்றி மறவாத நல்ல பண்பைப் பிறவிக் குணமாகக் கொண்டவன் நல்லியக்கோடன். சிற்றினம் சேராதவன். இன்முகம் உடையவன். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதவன். முகம் நக மட்டுமன்றி அகம் நகவும் (உள்ளம் மலர) பரிசிலர்களை வரவேற்பவன். இத்தகைய சிறந்த பண்பு நலன்களை எல்லாம் அவனை நன்கு அறிந்த சான்றோர்கள் எந்நாளும் புகழ்ந்து கூறுவர். இதனை,

செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்
இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்
செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த

(சிறுபாணாற்றுப்படை, 207-209)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

## 5.1.2 போர் வீரர் புகழ்தல்

நாடாளும் மன்னன் வீரம் மிக்கவனாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் எவருக்கும் அஞ்சாது சிறந்த ஆட்சி என்று சொல்லத்தக்க செங்கோலாட்சி செலுத்த முடியும். நல்லியக்கோடனின் சிறந்த வீரத் தன்மையைப் போர் வீரர்கள் பின்வருமாறு புகழ்ந்து கூறுகிறார்கள்.

- பகைப் படையினரைக் கண்டு அஞ்சாது அவர்களை அழிக்கும் ஆற்றல் உடையவன்.
- தன்னை அடி பணிந்து தன் கீழ் அடங்கி ஆட்சி செய்யும் பகைவரிடத்துக் கோபம் கொள்ளாது இரக்கம் காட்டும் அருள் உள்ளம் உடையவன்.
- பயந்து நடுங்கி ஓடும் தன் படையினரைச் சுற்றி வளைத்து அவர்களுக்கு வீரமொழிகள் கூறி, அவர்களை வீரமுடன் போரிடச் செய்பவன்.

இவ்வீரத் தன்மையை,

அஞ்சினர்க்கு அளித்தலும் வெஞ்சினம் இன்மையும்
ஆண்அணி புகுதலும் அழிபடை தாங்கலும்
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த

(சிறுபாணாற்றுப்படை, 210- 212)

என்னும் அடிகள் போற்றிக் கூறுகின்றன.

## 5.1.3 அரிவையர் புகழ்தல்

நினைத்ததை முடிக்கும் ஆற்றல் உடையவன்; பெண்களால் பெரிதும் விரும்பப்படும் தன்மையன்; பெண்கள் வசப்படாதவன்; பெண்களின் வருத்தத்தை அறிந்து அதனைப் போக்குபவன்; அவர்களைப் பாதுகாக்கும் இயல்பை உடையவன் என்று நல்லியக்கோடனைப் பெண்கள் (அரிவையர்) புகழ்ந்து கூறினர். இதனை,

கருதியது முடித்தலும் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையும் ஓடியது உணர்தலும்
அரியேர் உண்கண் அரிவையர் ஏத்த

(சிறுபாணாற்றுப்படை, 213-215)

என்னும் அடிகள் விளக்கிக் கூறுகின்றன.

### 5.1.4 பரிசிலர் புகழ்தல்

நல்லியக்கோடனின் அறிவு மடம்படுதல், வரிசை (தகுதி) அறிந்து பரிசு நல்கும் திறம், வரையாது (அளவில்லாது) வழங்கும் வள்ளல் தன்மை முதலியவற்றை இம்மன்னனிடம் பரிசுப் பொருள் பெற்ற பரிசிலர் புகழ்ந்து கூறினர்.

- அறிவு மடம்படுதல்

அறிவு நிரம்பப் பெறாதவர்கள் தன்னிடம் வந்து தவறானவற்றைக் கூறினால், அவற்றை அறியாதவன் போல விரும்பிக் கேட்பான். அறிந்தும் அறியாதவன் போல் இருக்கும் இப்பண்பை அறிவு மடம்படுதல் என்பர்.

- வரிசை அறிந்து பரிசு நல்கல்

பரிசில் பெறும் நோக்கோடு தன்னிடம் வந்த பரிசிலர்களுக்கு வேண்டுவன வழங்கும் வள்ளல் குணம் கொண்டவன் இம்மன்னன். ஆயினும், பரிசிலரின் தகுதி அறிந்து அவர்களின் தகுதிக்கு இழுக்கு ஏற்படாத வகையில் வாரி வழங்குவான். இப்பண்பை வரிசை அறிந்து பரிசு நல்கல் என்பர்.

- வரையாது வழங்குவோன்

பரிசிலரின் வரிசை அறிந்து பரிசு நல்குபவன் இவன்; எனினும் பரிசிலரின் நெஞ்சம் நிறையுமாறும் அவர்கள் மட்டுமன்றி அவர்களின் உறவினர்களும் பெற்றுப் பயன் அடையும் வகையிலும் அளவில்லாப் பரிசுப் பொருள்களை வாரி வழங்குவான். இத்தன்மையை வரையாது வழங்கும் வள்ளல் தன்மை என்று சிறப்பித்துக் கூறுவார்.

நல்லியக்கோடனின் வள்ளல் தன்மையை எடுத்துரைக்கும் அடிகள் இவை:

அறிவுமடம் படுதலும் அறிவுநன்கு உடைமையும்
வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த

(சிறுபாணாற்றுப்படை, 216-218)

- வீற்றிருத்தல்

இத்தகைய கொடைத் திறம் மிக்க மன்னன் விண்மீன்களுக்கு இடையே ஒளி வீசும் நிலவைப் போல அறிஞர், வயவர் (மறவர் வீரர்), அரிவையர், பரிசிலர் ஆகியோர் சூழ அரசு வீற்றிருந்தான்.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 5.2 யாழின் சிறப்பு

சிறுபாணன் கையில் இருந்தது சீறி யாழ் என்று கூறப்படும் சிறிய யாழ். அதன் தன்மைகளாவன:

கருங்குரங்கு தன்னைக் கடிக்கவரும் பாம்பினிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அதன் தலையைப் பிடித்துக் கொள்ளும். அப்போது அப்பாம்பு குரங்கின் கையை ஓரிடத்தில் இறுக்கமாகவும் ஓரிடத்தில் நெகிழ்ச்சியாகவும் சுற்றிக்கொள்ளும். அதுபோல யாழ்த் தண்டினிடத்தில் நெகிழ வேண்டிய இடத்தில் நெகிழ்ந்தும் இறுக வேண்டிய இடத்தில் இறுகியும் உள்ள நரம்பு கட்டியிருக்கும் கட்டுகளை உடையது அந்த யாழ்.

மணிகளை வரிசையாகக் கோத்து வைத்ததைப் போன்று இரண்டு விளிம்பையும் சேர்த்துத் தைத்து முடுக்கின ஆணிகளைக் கொண்டது.

யாழின் ஒரு பகுதி குடம் போலப் பருத்திருக்கும் (அதனை வயிறு போல எனக் குறிப்பிடுகிறார் புலவர். அதனைப் பத்தர் என்பர்). ஒழுங்குபட்ட தொழில்வகை அமைந்த பத்தரை உடையது; குமிழம் பழம் போன்ற நிறம் உடைய போர்வைத் தோலால் போர்த்தப்பட்டது அந்த யாழ்.

அமிழ்தத்தைத் தன்னிடத்தே பொதிந்து வைத்திருக்கும் தேனை ஒழுக விட்டதைப் போன்ற முறுக்கு அடங்கின நரம்புகளைக் கொண்டது. யாழின் அமைப்பை இவ்வாறு சிறப்பிக்கிறார் நத்தத்தனார்.

பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன

அம்கோட்டுச் செறித்த அவிழ்ந்துவீங்கு திவவின்

மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பின் . . .

(அடிகள் 221-227)

### 5.2.1 யாழும் பாணனும்

அழகிய சீறியாழைக் கையிலே கொண்டுள்ள சிறுபாணனே! இந்த யாழினைக் கொண்டு இசை நூல் கூறுகின்ற முறைகளின்படி செம்பாலையாக இயக்கிப் பாடுக என்று பரிசில் பெற்ற பாணன் பரிசு பெற விரும்பும் பாணனை நோக்கிக் கூறினான்.

அங்ஙனம் நீங்கள் நல்லியக்கோடனைப் பாடும் பொழுது, “ஐம்பெரும் குரவர்க்கும் எப்பொழுதும் குவித்த கைகளை உடையவனே! ஏரினை உடைய குடிமக்களின் துன்பம் நீக்கி அவர்களுக்கு நிழல் போல இன்பம் அளிக்கும் செங்கோலை (சிறந்த ஆட்சியை) உடையவனே! பகை அரசர்க்குத் துன்பம் தரும் வேலினை உடையவனே! என்றவாறெல்லாம் அவனின் பெருமையைப் புகழ்ந்து பாடுங்கள்” என்கின்றான். (ஐம்பெரும்குரவர் – அரசன், ஆசிரியர், தாய், தந்தை, தமையன் ஆகியோர்.)

முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்,
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்,
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்,
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்,
நீசில மொழியா அளவை . . . . . .

(அடிகள், 231-235)

## 5.3 வள்ளல்

சீறி யாழ் கொண்டு இனிய இசையை மீட்டி நல்லியக்கோடனின் புகழைக் கூறத் தொடங்கிய உடனேயே அவன் உங்களை மிக விருப்புடன் எதிர்கொண்டு வரவேற்பான் என்று பரிசல் பெற்ற பாணன் கூறுகிறான்.

### 5.3.1 உடையும் உணவும்

வறுமையில் வாடும் ஒருவனுக்குத் துன்பத்தை நீக்குவதில் முக்கியமானது உணவும் உடையும் ஆகும். ஏனெனில் தமிழர் மானத்தைப் பெரிதாகக் கருதுவர். மானத்துக்குச் சோதனை தரத்தக்க வகையில் கிழிந்த கந்தல் ஆடையைப் பாணன் உடுத்தி இருக்கிறான். இதைப் பார்த்த மன்னன் முதலில் பாணனுக்கு மென்மையானதும் அழகானதுமான ஆடையைக் கொடுத்து உடுத்தச் சொன்னான்.

மானம் காத்த பிறகு அவனின் உயிர் காத்தல் அடுத்த பணி ஆகும். அதனால் அவன் வயிறார உண்ணுவதற்கு ஏற்றவாறு அறுசுவை உணவை வழங்கினான். அந்த உணவையும் அரசன் அவர்களின் அருகில் இருந்து தானே பரிமாறினான்.

- உடை

நல்லியக்கோடன் ஆடை வழங்கும் தன்மை பற்றி,

“பாணர்களே! நீங்கள் அணிந்திருக்கும் கந்தல் ஆடையைக் களையச் செய்து மூங்கிலின் உள்பட்டையை உரித்ததைப் போன்ற தூய்மையான, மென்மையான ஆடைகளை உங்களுக்குத் தந்து உடுத்தச் சொல்வான்.

. . . . . . . . . . மாசில்
காம்புசொலித் தன்ன அறுவை உடீஇ”

(அடிகள், 235-6)

என்கிறான் பரிசு பெற்ற பாணன்.

- உணவு

நல்லியக்கோடன் உணவு வழங்கும் தன்மை பற்றி,

“மயக்கமும் மகிழ்ச்சியும் தருகின்ற தெளிந்த கள்ளைக் கொடுத்து உங்களைப் பருகச் செய்வான். சமையல் கலையில் வல்லவன் வீமன். அவன் எழுதிய நூலில் கூறியவாறு சுவை தரும் வகையில் சமைத்த பல்வேறு உணவு வகைகளைப் பொன் பாத்திரத்தில் இட்டு உங்களை உண்ணச் செய்வான். அருகில் நின்று அவனே உங்களுக்கு உணவு வழங்கி மகிழ்வான்” என்று ஆற்றுப்படுத்தும் பாணன் கூறினான்.

### 5.3.2 பரிசும் பாணனும்

பசியும் வறுமையும் வாட்ட, தன்னிடம் வந்த பாணர்களின் துன்பத்தைப் பரிவுடன் போக்கியவன் நல்லியக்கோடன். அவர்கள் மனம் மேலும் மேலும் மகிழ்ச்சி அடையும் வகையிலும் மீண்டும் வறுமைத் துயரம் ஏற்படா வண்ணமும் அவர்களுக்குப் பல்வேறு

பரிசுப் பொருட்களை வாரி வாரி வழங்கினான்.

பகைவர்களை விரட்டி அடித்த தன் படைத் தலைவர்கள் கொண்டு வந்த பொன் குவியலுடன் தொழிலில் சிறந்த தச்சர்கள் செய்த சிறப்பு மிக்க தேர், குதிரைகள், வெள்ளை எருது, பாகனொடு ஊரும் யானை, அணிகலன் ஆகிய பொருட்களைக் கொடுத்து மகிழ்ந்தான்.

மென்தோளும், ஆடிய சாயலும் உடைய மகளிர் அகில் புகை ஊட்டுவதன் பொருட்டுத் தம் கூந்தலை விரிப்பர். பெண்களின் விரிந்த கூந்தலைப் போன்று மயில் தன் தோகையை விரித்து ஆடுவதற்குக் காரணமான கருமேகங்கள் வெண் மேகங்களிடையே தவழ்கின்ற மலை; மூங்கில்கள் நிறைந்த மலை; யாராலும் ஏறுவதற்கு அரிய உயர்ந்த உச்சியைக் கொண்ட மலை. இத்தகைய மலைகள் சூழ்ந்த நிலத்திற்குத் தலைவனும் கொடைத்திறம் மிக்கவனுமாகிய நல்லியக்கோடனை நாடி நீங்கள் செல்லுங்கள்; பரிசில்களைப் பெறுங்கள்; சுற்றம் சூழ வறுமை நீங்கி வாழுங்கள் என்று பரிசில் பெற்ற பாணன் வறிய பாணனுக்குப் பரிசு பெற வழிகாட்டுகிறான். தான் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெற உதவுகிறான்.

வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு
மாசெலவு ஒழிக்கும் . . . . . தரீஇ
அன்றே விடுக்கும் அவன் பரிசில் . . .
. . . . . . . . . . . . . . . . . .
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க்கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

(அடிகள், 249-269)

## 5.4 தொகுப்புரை

வறுமையில் வாடிய பாணனின் வறுமை நீங்குவதற்கு வழி காட்டும் வகையில் பரிசு பெற்ற பாணனின் வழிகாட்டுதல் அமைந்துள்ளதை இப்பாடம் உணர்த்துகிறது. மேலும், வறிய பாணனுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நல்லியக்கோடனின் பெருமை, புகழ், வள்ளல் தன்மை ஆகியவற்றைப் பிறர் புகழ்வதைப் பாணன் சுட்டிக் காட்டுகிறான். அதுமட்டுமன்றி அவனிடம் சென்றால் கிடைக்கும் பரிசுப் பொருள்களையும் வரிசைபடக் கூறுவது பாணனுக்குத் தன் வறுமை நீங்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 6

# D01136 சிறுபாணாற்றுப்படை – 6

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் சிறுபாணாற்றுப்படை ஆசிரியரின் படைப்புத் திறம் குறித்து விவரிக்கிறது. சிறுபாணாற்றுப்படையில் அமைந்துள்ள உவமை நயம், வருணனைத் திறம் பற்றி எடுத்துரைக்கிறது. தமிழர் பண்பாடு பற்றியும் குறிப்பாக விருந்தோம்பல் திறம் குறித்தும் விளக்கிக் கூறுகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- நல்லூர் நத்தத்தனாரின் படைப்புத் திறம் குறித்து அறியலாம்.
- சிறுபாணாற்றுப்படையில் அமைந்துள்ள உவமை நயம் பற்றிய செய்திகளை விளங்கிக் கொள்ளலாம்.
- சிறுபாணாற்றுப்படையில் வருணனைத் திறம் பற்றிய தெளிவைப் பெறலாம்.
- தமிழர்களின் நயத்தக்க நாகரிகம் பற்றிய புரிதல் ஏற்படும்.
- தமிழர்களின் விருந்தோம்பும் திறம் பற்றி அறியலாம்.

# பாட அமைப்பு

6.0 பாட முன்னுரை

6.1 உவமை

6.2 மாந்தர் வருணனை

6.3 நில வருணனை

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

6.4 பிற வருணனைகள்

6.5 தமிழர் பண்பாடு

6.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 6.0 பாட முன்னுரை

மாணவர்களே! சிறுபாணாற்றுப்படையின் முதல் ஐந்து பாடங்களில் பத்துப்பாட்டுப் பற்றிய பொதுச் செய்திகள், சிறுபாணாற்றுப்படை பற்றிய அறிமுகச் செய்திகள், பாணனின் வறிய நிலைமை, பரிசு பெற்ற பாணன் பரிசில் பெற விழையும் பாணனுக்கு வழிகாட்டும் திறம் ஆகிய செய்திகளைக் கற்று உணர்ந்தீர்கள். இப்பாடத்தின்கண், சிறுபாணாற்றுப்படையின் இலக்கியத் திறத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போகிறீர்கள். இப்பாடத்தில் சிறுபாணாற்றுப்படையில் உவமை நயம், வருணனைத் திறம், தமிழர் பண்பாட்டில் தலைசிறந்ததாகிய விருந்தோம்பல் உள்ளிட்ட செய்திகள் விளக்கப்படுகின்றன.

- படைப்பின் சிறப்பு

இலக்கியத்தைக் காலக் கண்ணாடி என்பர். ஏனெனில் இலக்கியங்கள் தம் காலத்துச் சமுதாய நிகழ்வுகளைச் சுற்றி அமைவதே காரணம். புலவன் தன் சமகாலத்துச் செய்திகளை இலக்கியங்களில் பதிவு செய்வான்; இப்பதிவுகளைத் தன் அன்றாட வாழ்க்கை அனுபவத்தினின்றும், தான் கண்ட, கேட்ட செய்திகள், பொருள்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் அமைப்பான்.

தான் கண்டும் கேட்டும் மகிழ்ந்தும் உணர்ந்த அல்லது அறிந்த செய்திகளை, உள்ளது உள்ளவாறே புலவன் படைத்தளிப்பான் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படியே அளித்தாலும் அவனது படைப்பு இலக்கிய நயம் மிக்கவையாக அமையாது. ஆகையால் தான் கூற விரும்பும் செய்திகள் உண்மைத் தன்மை உடையனவாக இருந்தாலும் அவற்றில் உவமை, கற்பனை உள்ளிட்ட இன்னும் பிறவற்றைக் கலந்து நயம் கூட்டுவான். அப்பொழுதுதான் அவனது படைப்புகள் சுவை மிகுந்தனவாய் இருக்கும். இத்தகைய ஆற்றல் வாயிலாக, படைப்பாளனே காலத்தால் அழியாதவனாய் இருப்பான்.

# 6.1 உவமை

புலவர்கள் தாம் கண்ட காட்சிகளைப் படிப்பவர் உள்ளத்தைக் கவரும் வகையில் படைத்தளிக்கும் முறைகளுள் தலைசிறந்ததாக உவமையைக் கூறலாம். உவமை நான்கு அடிப்படைகளில் பிறக்கும். அவை:

(1) வினை

(2) பயன்

(3) வடிவம்

(4) வண்ணம்

சிறுபாணாற்றுப்படையிலும் இந்நான்கு வகை உவமைகள் அமைந்துள்ளன.

## 6.1.1 வினை உவமம்

மன்னன் நல்லியக்கோடனைப் புலவர் நத்தத்தனார், உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன் என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரிய புலி போலும் வலிமை பொருந்தியவன் நல்லியக்கோடன் என்பது இதன் பொருள் ஆகும். இங்கு நல்லியக்கோடனின் செயல் வலிமைக்குப் புலியின் செயல் வலிமை உவமையாகக் கூறப்பட்டது. ஆகையால் இது வினை உவமம் ஆயிற்று.

## 6.1.2 பயன் உவமம்

பாணர்களுக்கு விருந்தோம்புவதில் சிறந்தவன் நல்லியக்கோடன். இவன் பாணர்களுக்கு உணவுடன் நல்ல தேறலையும் (கள்) கொடுத்துக் குடிக்கச் செய்தான். இத்தேறலை உண்ட பாணர்களுக்குப் போதை மயக்கம் உண்டாயிற்று. இது பாம்பு கடித்த உடன் அதன் நஞ்சு தலைக்கு ஏறி மயக்குவது போன்று இருந்ததாம். இதனை, பாம்பு வெகுண்டன்ன தேறல் என்று நத்தத்தனார் கூறுவதன் மூலம் அறியலாம். இது தேறல் உண்டதன் பயன். ஆதலால் இது பயன் உவமம் ஆயிற்று.

## 6.1.3 வடிவ உவமம்

யானையின் துதிக்கையைப் போன்று பெண்களின் சடைப்பின்னல் இருந்ததாம். உவமையின் அழகைப் பாருங்கள். தும்பிக்கையானது தொடக்கத்தில் பெருத்தும் போகப் போகச் சிறுத்தும் காணப்படும். அதுபோல் பெண்களின் சடையும் தொடக்கத்தில் பெருத்தும் போகப் போகச் சிறுத்தும் காணப்படுகிறதாம்.

பெண்கள் சடையின் வடிவத்திற்கு யானையின் தும்பிக்கை ஒப்புமை கூறப்பட்டமையால் இது வடிவ உவமம் ஆயிற்று. இதனை மெய் உவமம் என்றும் கூறுவர். இவ்வுவமையைக் கூறும் வரிகள் இவை:

உரன்கெழு நோன்பகட்டு உழவர் தங்கை
        பிடிக்கை அன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
        தொடிக்கை மகடூஉ. . . .

(அடிகள், 190-192)

### 6.1.4 வண்ண உவமம்

சீறியாழில் பத்தரின் மேல் செந்நிறத் தோல் மூடியிருந்தது. இது குமிழம் பழத்தின் நிறம்போல் இருந்தது என்பதை,

கானக் குமிழின் கனிநிறம் கடுப்பப்
புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு

(அடிகள் 225-6)

என்னும் அடிகள் கூறுகின்றன. இவ்வுவமை நிறத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும்.

அதுபோல், நல்லியக்கோடன் பரிசிலர்க்கு வழங்கும் ஆடை தூய்மையான வெள்ளை நிறம் உடையது. இந்த ஆடைக்கு மூங்கிலின் உள்ளே இருக்கும் வெள்ளிய தோல் உவமை ஆக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு உவமைகளும் வண்ணத்தின் அடிப்படையில் அமைந்தமையால் வண்ண உவமை (உரு உவமை) ஆயிற்று.

## 6.2 மாந்தர் வருணனை

கவிதைக்கு அடிப்படையானது கற்பனை. கவிதையின் வெற்றியில் கற்பனையின் பங்கு மகத்தானது. படைப்போரையும் பயில்வோரையும் ஒரே தடத்தில் அழைத்துச் செல்வது கற்பனை ஆகும். உவமை, உருவகம், வருணனை என்று பல வடிவங்களில் கற்பனை வெளிப்படும்.

புலவன் தன் கருத்தை வெளிப்படுத்தும் வழி முறைகளில் ஒன்றான வருணனை முறை சிறுபாணாற்றுப்படையில் அமைந்துள்ள தன்மையைத் தொடர்ந்து நோக்கலாம்.

### 6.2.1 விறலியர் வருணனை

புரவலனை நாடிப் பாணர்கள் தங்கள் விறலியருடன் சென்றனர். அவ் விறலியர்களின் அழகை நத்தத்தனார் வருணிக்கும் திறம் வியத்தற்கு உரியது.

அழகை வருணிப்பதில் தலையில் தொடங்கிக் கால் வரை வருணிப்பது ஒரு முறை. இதனைக் கேசாதிபாத வருணனை என்பர். அதுபோல் காலில் தொடங்கித் தலை வரை வருணிப்பது மற்றொரு முறை. இதனைப் பாதாதி கேச வருணனை என்பர். இவற்றுள் விறலியரைக் கேசாதிபாத வருணனை முறையில் வருணிக்கிறார் புலவர். இது இரண்டாம் பாடத்தில் 2.3.2 என்னும் பகுதியில் விரிவாகத் தரப்பட்டுள்ளது. விறலியர் வருணனையில் ஒரு சிறு பகுதியை மட்டும் இங்குக் காண்போம்.

விறலியர்கள் அழகு ஓவியங்களாக உள்ளனர். அவர்கள் நெடுந்தொலைவு நடந்து வந்தமையால் அவர்களின் அழகிய, மென்மையான பாதங்கள் சிவந்து போயின. இதனைக் கண்ணுற்ற புலவருக்கு நீண்ட தூரம் ஓடி இளைத்த நாயின் நாக்கு நினைவிற்கு வந்தது.

நீண்ட தூரம் ஓடிய நாயின் நாக்கும் சிவந்து இருக்கும். எனவே, விறலியரின் சிவந்திருந்த பாதங்கள் ஓடி இளைத்த நாயின் நாக்குப் போன்று சிவந்து இருந்தன. அதாவது ஓடி இளைத்த நாயின் நாக்குப் போன்று செம்மையும் மென்மையும் உடையதாம் விறலியரின் பாதம். இதனைக் காட்டும் அடிகள் இதோ:

.. . . . . . . . . . . . . சாஅய்
உயங்குநாய் நாவின் நல்லெழில் அசைஇ
வயங்கிழை உலறிய அடியின்

(அடிகள் 16-18)

### 6.2.2 பாணன் வருணனை

பாணனின் வறிய நிலையைப் படிப்போர் பேரிரக்கம் கொள்ளும் வகையில் புலவர் எடுத்துக்காட்டி உள்ளார். பாணனின் வறுமையை உள்ளவாறே காட்டுவதாகப் புலவனின் கற்பனை அமைந்துள்ளது. வறுமையின் அடையாளச் சின்னமாக அவனது வீடு இருக்கிறது. அவன் வீட்டின் வறுமை அழகு இது:

- வீட்டுச் சுவர் மிகவும் பழைமையானது. ஆங்காங்கே கறையான் புற்றுகள் கிளம்பி இருந்தன.
- வீட்டுக் கூரையில் கீற்றுகள் இருந்தாலும் இல்லாதது போன்றே காட்சி அளித்தது.

- வீட்டுக் கூரையின்கண் இருந்த கழிகளின் கட்டுகள் அறுந்து கீழே விழும் நிலையில் கழிகள் இருந்தன.
- வீட்டில் உணவு சமைத்துப் பல நாட்கள் ஆயிற்று. அதனால் அடுக்களை (அடுப்படி) காளான் பூத்துக் கிடந்தது. (அடிகள் 132-134)

இக்கற்பனை பாணனின் வறிய இல்லத்தை ஓவியக் காட்சிபோல் படிப்போர் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

## 6.3 நில வருணனை

குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், முல்லை ஆகிய ஐந்து நில வருணனைகளும் இந்நூலில் அமைந்துள்ளன.

### 6.3.1 குறிஞ்சி

நெடிது உயர்ந்த மலை நிலங்களுக்குத் தலைவன் நல்லியக்கோடன். இவனைக் குறிஞ்சிக் கோமான் என்று குறிப்பிடுகிறது சிறுபாணாற்றுப்படை.

தொண்டை மண்டலக் குறிஞ்சி நிலத்தைப் பேரழகு வாய்ந்த பெண்ணாகப் புலவர் வருணிக்கிறார். அம்மலையில் வளரும் மூங்கிலை அவளது அழகிய தோள்களுக்கு ஒப்பிடுகிறார். மலைவீழ் அருவியை அந்த நிலப்பெண் அணிந்துள்ள முத்தாரமாகக் கற்பனை செய்கிறார்.

பெண்கள் அகில் புகை ஊட்டுவதற்காகத் தம் கருநிறக் கூந்தலை விரித்து நின்றமை அம்மலையில் வாழும் மயில்கள் கார் கால மேகம் கண்டு தோகை விரித்து ஆடுவது போன்று இருந்தது.

### 6.3.2 பாலை

கார் காலத்தில் பெய்த மழைநீர் உயர்ந்த மலையினின்றும் அருவியாகக் கீழ் நோக்கி வேகமாக வீழ்கிறது. அந்நீரின் வேகத்தால் பாறைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றன. அதனால் அப்பாறைகள் உடைந்தும் சிதைந்தும் நுண்மணலாகிப் போகின்றன. இங்ஙனம் உருவான மணல் முல்லை நிலப்பரப்பில் மணல் படுகையாகக் கிடக்கிறது.

இத்தகைய மணல் படுகை சுழல் காற்றின் சுழற்சிக்கு உட்பட்டு அலை அலையாய்ப் படிந்து கிடக்கும் காட்சி நிலமகளின் கூந்தல் நெளி நெளியாக இருப்பதை ஒத்து இருக்கிறது.

இம் மணல் வெயில் கால வெப்பத்தை மிகுதியாக ஏற்றுக்கொண்டு கொல்லன் உலைக்கல்லில் சூடேற்றிய இரும்பு போலக் கொதிக்கிறதாம். இது,

கதுப்பு விரித்தன்ன காழ்அக நுணங்குஅறல்
அயில்உருப்பு அனைய ஆகி ஐதுநடந்து
வெயில்உருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனில் நின்ற வெம்பத வழிநாள்
காலை ஞாயிற்றுக் கதிர்கடா வுறுப்ப
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதல் மராஅத்த வரிநிழல் அசைஇ

(சிறுபாணாற்றுப்படை – 6-12)

என்று வருணிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

### 6.3.3 மருதம்

சோழ நாட்டின் மருத நில வளத்தைக் கூறும் சிறுபாணாற்றுப்படை, நறுநீர்ப் பொய்கை ஒன்றை வருணனை செய்கிறது.

நறுநீர்ப் பொய்கை ஓவியம் போன்று உள்ளது. இப்பொய்கையின் கரைகளில் கடப்ப மரங்கள் செழித்து வளர்ந்துள்ளன. இம்மரங்களில் இருந்து பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூமாலைகள் போல் தொங்குகின்றன. இம்மலர்களில் இருந்து இந்திர கோபத்தை ஒத்த மகரந்தப் பொடிகள் பொய்கை எங்கும் வீழ்கின்றன. இப்பொடிகளின் இடைவிடாத தூறலால் முகிழ்த்த தாமரை மொட்டுகள் கட்டவிழ்ந்து திறந்து கொள்கின்றன. இதனால் தாமரையின் பொகுட்டுகள் வெளிப்படுகின்றன. அப்பொகுட்டின் மீது வண்டினங்கள் தங்கள் பெண் இன வண்டுகளைத் தழுவியவாறே சீகாமரப் பண்ணைப் பாடிக் கொண்டே மொய்க்கின்றன. இவ்வழகிய வருணனை சிறுபாணாற்றுப்படையின் 68 முதல் 78 வரையிலான அடிகளில் காணப்படுகிறது.

### 6.3.4 நெய்தல்

நெய்தல் நிலம் எங்கும் தாழைப் புதர்கள் மண்டிக் கிடக்கின்றன. அச்செடிகள், பருத்துத் தோன்றும் வெண்மையான பூக்கள் பலவற்றைப் பூத்திருக்கின்றன. அத்தோற்றம் அன்னப் பறவைகள் பல அங்கே அமர்ந்து இருப்பது போன்று காட்சியளிக்கிறது.

இளவேனில் பொழுதில் நன்கு செழித்து வளரக் கூடிய நெய்தல் நிலச் செருந்தி, கண்டார் வியக்கும் வகையில் பொன் நிறத்தில் பூத்துக் கிடக்கிறது. கழிமுள்ளிச் செடிகள், உப்பங்கழிகள் தோறும் பரந்து வளர்ந்திருக்கின்றன. அவற்றில் இருந்து பூக்கள் கொத்துக் கொத்தாகக் கருநிற மணிகள் போன்று பூத்துள்ளன.

கடற்கரையில் நெடிது உயர்ந்து நிற்கும் புன்னை மரங்கள் முத்துகள் போல அரும்புகளை அந்நிலம் முழுவதும் உதிர்த்து வைத்திருக்கின்றன. புலவனின் கற்பனையில் உதித்த அடிகள் இதோ:

அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி காஅலவும்
நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடல்உலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்தல் நெடுவழி.

(சிறுபாணாற்றுப்படை, 146-151)

### 6.3.5 முல்லை

பசுமையான அவரைக் கொடிகள் பவளம் போன்று அரும்புகளைத் தொடுத்திருக்கின்றன. காயாம் புதர்கள் மயிலின் கழுத்து நிறம் போன்று கருநிறப் பூக்களுடன் பூத்துக் கிடக்கின்றன. முசுண்டைச் செடிகள் ஓலைப் பெட்டிகளைப் போன்ற பூக்களுடன் காட்சி அளிக்கின்றன. கைவிரல்கள் விரித்ததைப் போன்று காந்தள் மலர்கள் பூத்துள்ளன. முல்லைக் காடென முல்லைப் பூக்களும் பூத்துச் சிரிக்கின்றன.

இங்ஙனம் சிறுபாணாற்றுப்படையில் குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், முல்லை ஆகிய ஐவகை நிலங்களும் அழகிய முறையில் வர்ணிக்கப் பட்டுள்ளன.

பைந்நனை அவரை பவழம் கோப்பவும்
கருநனைக் காயா கணமயில் அவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவின் . . ..

(அடிகள் 164-169)

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 6.4 பிற வருணனைகள்

மேற்குறிப்பிட்டவை தவிர, அரண்மனையைப் பற்றியும், தேரைப் பற்றியும், யாழைப் பற்றியும் வருணனைகள் உள்ளன.

### 6.4.1 அரண்மனை வருணனை

வள்ளல் நல்லியக்கோடனின் அரண்மனை மேரு மலையைப் பெயர்த்து வைத்தது போன்ற தோற்றம் உடையது. அதன் வாயில் அம்மலை கண் திறந்தது போன்று காட்சி தருகிறது. அவ்வாயில் எப்பொழுதும் மூடப்படாத நெடுவாயிலாக விளங்குகிறது. அடையா நெடுங்கதவைக் கொண்ட இந்த அரண்மனைக்கு, பொருநர் முதலான பலவகை மக்களும் புலவர், சான்றோரும் தடங்கல் இன்றிச் சென்று வந்தனர்.

### 6.4.2 தேர் வருணனை

நல்லியக்கோடன் இரவலர்க்கு இன்முகத்துடன் வழங்கும் பரிசுப் பொருள்களுள் தேரும் ஒன்று. இத்தேர் கைதேர்ந்த தொழில் திறன் மிக்க தச்சர்களால் உருவாக்கப்பட்டது. இத்தச்சர்கள் சிற்றுளி கொண்டு தேரின் ஒவ்வோர் உறுப்பாகப் பலகாலும் செதுக்கிச் செதுக்கி அழகிய சித்திர வேலைப்பாடுகளுடன் அமைத்திருந்தனர்.

இத்தேர்ச் சக்கரத்தின் ஆரக்கால்கள் குறட்டுடன் (குடம்) நன்கு பொருத்தப்பட்ட அழகிய தோற்றத்தை உடையன. இத்தேர்த் தட்டின் உட்புறப் பலகைகள் முருக்க மரப் பூ நிறத்தை ஒத்த அரக்கால் செந்நிறம் ஊட்டப் பெற்றன. இத்தகைய அழகிய தேர்களை வெள்ளோட்டமாக ஓட்டிப் பார்த்து மனநிறைவு பெற்ற பின்னரே அரசன் பரிசிலர்களுக்கு வழங்கினான்.

### 6.4.3 யாழ் வருணனை

பல்வகை இசைக் கருவிகளுள் யாழ் என்பதும் ஒன்றாகும். பத்தர், தண்டு, திவவு, பச்சை, நரம்பு என்பன இதன் முக்கியமான உறுப்புகள் ஆகும்.

- பத்தர்

பெரிய வயிற்றை ஒத்த வெற்று அறையுடன் கூடிய யாழின் அடிப் பகுதியைப் பத்தர் என்பர்.

- தண்டு

பத்தருடன் படம் எடுத்த பாம்பின் தோற்றத்துடன் பொருத்தப் பட்டிருக்கும் மரத்தண்டு.

- திவவு

மேல்நோக்கிப் பத்தருடன் நிறுத்தப்பட்ட தண்டின் முனைப் பகுதியையும் கடைப் பகுதியையும் நரம்புகள் பலவற்றால் இணைத்திருப்பர். அவ்வாறு இணைக்கப்பட்ட நரம்புகளை, ஒரு பக்கம் இழுத்து வைத்து இறுக்கிச் சுற்றவும் தளர்ந்து போகுமாறு விடவும் தண்டின் முனைப் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் மரத் திருகுக் கருவியைத் திவவு என்பர்.

- பச்சை

பருத்த வயிறாக வெற்று அறையுடன் கூடிய பத்தரைப் பசிய விலங்கின் தோல் கொண்டு போர்த்திய நிலையில், காற்றின் அதிர்வினால் நரம்பின் வழியாக இன்னிசை பிறக்கும். இங்ஙனம் போர்த்தப்பட்ட தோலில் சுருக்கம் ஏற்படாதவாறு பத்தரின் விளிம்பு முழுவதுமாக நுண்ணிய வார் கொண்டு தைத்திருப்பர். அவ்வாறு தைக்கப்பட்டுப் பத்தரின் மேல் போர்த்தப்பட்ட விலங்கின் தோலையே பச்சை என்பர்.

## 6.5 தமிழர் பண்பாடு

சங்க நூல்கள் அனைத்திலும் தமிழர் பண்பாடுகள் பரவிக் கிடக்கின்றன.

நண்பர்கள் நஞ்சைக் கொடுத்தாலும் அது நஞ்சு என்று தெரிந்தும் உண்பர். இதனை நயத்தக்க நாகரிகம் என்பார் திருவள்ளுவர். தமிழர்களின் இந்நனி நாகரிகத்தைச் சுட்டும் குறள் இது:

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

(குறள் – 580)

உலகம் முழுவதையும் தம் சொந்த ஊராகவும் அதில் வாழும் அனைவரையும் தம் உறவினர்களாகவும் தமிழர் உறவாடி மகிழ்ந்ததைக் கணியன்பூங்குன்றன் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று எடுத்துக் கூறுகிறார்.

தனக்கென முயலாது பிறர்க்கென வாழும் பண்பாளரால்தான் உலகம் நிலைபெற்றிருக்கிறது என்று கூறி கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் சங்கப் புலவன் சான்றாண்மைக்கு அடையாளம் காட்டுகிறான்.

இத்தகைய சிறந்த பண்பாடுகளுக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள். அவர்களின் சிறந்த பண்பாடுகளுள் தலைசிறந்தது விருந்தோம்பல் என்னும் பண்பாகும்.

### 6.5.1 விருந்தோம்பல்

விருந்து என்றால் புதுமை என்று பொருள். அதாவது நம் வீட்டுக்கு வரும் புதியவர்களுக்கு உணவு படைத்தல் (அளித்தல்) விருந்தோம்பல் ஆகும்.

ஆனால், இன்றைய நிலையில் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் உணவு படைப்பதே விருந்தோம்பல் என்ற நிலை உள்ளது. விருந்து படைக்கும் இப்பண்பு தமிழர்களுக்கே உரியது எனில் அது மிகையன்று. இச் சிறந்த பண்பு பற்றித் திருவள்ளுவர் விருந்தோம்பல் என்னும் ஓர் அதிகாரமே படைத்துள்ளார்.

- சிறுபாணாற்றுப்படையில் விருந்து

கிடைப்பதற்கு அரிய அமிழ்தமே ஆனாலும் தமிழர்கள் தாம் மட்டுமே அதை உண்ணார். பலருக்கும் கொடுத்துப் பகிர்ந்து உண்பர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் இத்திறம் தமிழர்களின் தலையாய அற உணர்வின் வெளிப்பாடாகும். இத்திறம் சிறுபாணாற்றுப்படையிலும் காணக் கிடக்கிறது.

“அகில் மர விறகினால் தீ மூட்டிக் காய்ச்சி அரித்த (வடிகட்டிய) தேறலை (கள்) மீனவப் பெண்கள் மீனவர்களுக்கு உணவாகக் கொடுப்பர். விறலியரோடு செல்லும் நீங்கள் கிடங்கில் கோமானை (நல்லியக்கோடனை)ப் பாடியும் குழல் ஓசைக்கு ஏற்ப ஆடியும் செல்லும் பொழுது அப்பரதவரின் வீடுகள் தோறும் அவர்கள் மகிழ்ந்து கொடுக்கும் குழல் மீன் சூட்டைப் (ஒரு வகை சுட்ட மீன்) பெற்று உண்டு மகிழலாம்” எனவும்

முல்லை நிலப்பகுதி வழியாக, பகல் பொழுதில் சென்று கொண்டே இருந்தால் மாலைப் பொழுதில் வேலூரைச் சென்று அடையலாம். அங்கு, உள்ளேயிருப்போரை வருத்தும் வெப்பம் மிகுந்த குடிலில் (குடில் – வீடு) முல்லை நில மக்களாகிய எயினர்கள் இருப்பர். அக்குலத்துப் பெண்கள் (எயிற்றியர்) தாங்கள் சமைத்த மான் இறைச்சி கலந்த புளியஞ்சோற்றை வழங்குவர்கள். எனவும்

உழவர்கள் வலிமையான எருதுகளை உடையவர்கள். உழத்தியர் தங்கள் இல்லத்தின் உள்ளே இருந்துகொண்டு தங்கள் மக்களால் அன்புடன் வரவேற்பர். மருத நில வாழ் மக்கள் விருந்து உபசரிப்பதில் தலைசிறந்தவர்கள். ஆதலால், உழத்தியர் வெண்மையான அரிசிச் சோற்றை நண்டின் கறியுடன் சேர்த்து விருந்து அளிப்பர். இச் சோற்றை உண்டு மகிழலாம் எனவும், வரும் இவற்றின் மூலம், எளிய உணவாக இருந்தாலும்கூட விருந்தோம்புகின்ற பண்பில் இருந்து தமிழர் சிறிதும் விலகினார் இல்லை என்பது தெளிவாகிறது.

தமிழர் விருந்தோம்புகின்ற சீரிய திறத்தைச் சிறுபாணாற்றுப்படையில் பரதவர், எயினர், உழவர் ஆகியோர் பாணனுக்கு அளிக்கும் முறைமையில் பரக்கக் காண முடிகிறது.

## 6.6 தொகுப்புரை

அன்பு நிறை மாணவர்களே! சிறுபாணாற்றுப்படை இலக்கிய வளம்மிக்க ஒரு படைப்பு என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். சிறுபாணாற்றுப்படையில் அமைந்துள்ள உவமைகள், வருணனைகள், தமிழரின் பண்பாட்டுச் செய்திகள் முதலானவற்றை நினைவில் நிறுத்துங்கள். சிறுபாணாற்றுப்படையில் நிகழ்ச்சி விவரிப்புகள் ஒரு சிறுகதை போலவும், நாடகம் போலவும் அமைந்துள்ளதைக் கண்டு மகிழுங்கள்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# D01131

## தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.பத்துப்பாட்டு என்பதை விளக்குக.

விடை: பத்து நீண்ட பாடல்களின் தொகுப்பே பத்துப்பாட்டு ஆகும்.

2.ஆற்றுப்படை நூல்கள் எத்தனை?

விடை: ஐந்து.

3.திருமுருகாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் யார்?

விடை: முருகக் கடவுள்.

4.கூத்தராற்றுப்படையின் வேறு பெயர் யாது?

விடை: மலைபடுகடாம்.

5.பத்துப்பாட்டு நூல்களை எவ்வகையில் பிரித்துக் காணலாம்?

விடை:ஆற்றுப்படை நூல், அகநூல், புறநூல் என மூவகையாகப் பிரித்துக் காணலாம்.

முன்

# D01131

## தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.சிறுபாணாற்றுப்படை நூலின் ஆசிரியர் யார்?

விடை: நல்லூர் நத்தத்தனார்.

2.சிறுபாணன் – விளக்கம் தருக.

விடை: சிறிய யாழை இசைக்கும் பாணன்.

3.சிறுபாணாற்றுப் படை எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது?

விடை: ஆற்றுப்படை.

4.நல்லியக்கோடன் ஆட்சி செய்த நாடு எது?

விடை: ஓய்மா நாடு.

5.நல்லியக்கோடனின் தலைநகரம் எது?

விடை: கிடங்கில்.

முன்

# D01132

## தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.'பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ' என்று குறிப்பிடும் நூல் எது?

விடை: தொல்காப்பியம்.

2.பாணர்களின் பரந்த உள்ளத்தைக் காட்டுவது எது?

விடை: யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் உயர்ந்த எண்ணம்.

3.தமிழகத்தில் பாலைவனம் உள்ளதா?

விடை: இல்லை.

4.பாலைக்கு உரிய சிறுபொழுது யாது?

விடை: நண்பகல்.

முன்

# D01132

## தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.விறலியர் யாருடைய கூட்டத்தினைச் சார்ந்தவர்கள்?

விடை: பாணர்கள்.

2.விறலியர் பற்றிய வருணனை சிறுபாணாற்றுப்படையில் எம்முறையில் அமைந்துள்ளது?

விடை: கேசாதிபாதம்.

3.பாலை நிலத்துக்கு உரிய பண் எது?

விடை:பாலைப்பண்.

4.மயில்கள் மேகம் என்று எதை நினைத்தன?

விடை:விறலியரின் கூந்தலை.

முன்

# D01133

## தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.மூவேந்தர் யாவர்?

விடை: சேரர், சோழர், பாண்டியர்.

2.சேர மன்னர்களின் தலை நகரம் எது?

விடை: வஞ்சி.

3.சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மன்னர் யார்?

விடை: பாண்டியர்கள்.

4.உமணர் என்பதன் பொருள் தருக.

விடை: உப்பு வணிகர்.

5.உமணர்களின் வாழ்க்கை முறை பற்றி எழுதுக.

விடை: உப்பு வணிகர் உமணர். இவர்கள் உப்பு மூட்டைகளை வண்டிகளில் ஏற்றி ஊர்கள் தோறும் சென்று விற்பர். அப்பொழுது தம் மனைவி மக்களையும் உடன் அழைத்துச் செல்வர். அதுமட்டுமன்றித் தம் குழந்தைகளைப் போல வளர்த்த மந்தியையும் உடன் அழைத்துச் செல்வது உண்டு. அம்மந்தியை ஆடை, அணிகலன்கள் முதலியவற்றை அணிவித்து அலங்காரம் செய்து தம்முடன் அழைத்துச் செல்வர்.

அம்மந்திகள் அவர்தம் குடும்பத்தினருடனும் குழந்தைகளுடனும் முத்துகள் பெய்த கிளிஞ்சல் சிப்பிகளைக் கொண்டு கிலுகிலுப்பை (விளையாட்டுப் பொருள்) ஆட்டி மகிழும்.

முன்

# D01133

## தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.சோழ நாடு எதனை உடைத்து?

விடை: சோறு.

2.கடையெழு வள்ளல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

விடை: பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி.

3.முல்லைக்குத் தேர் ஈந்தவன் யார்?

விடை: பாரி.

4.மயிலுக்குப் போர்வை தந்த வள்ளல் யார்?

விடை: பேகன்.

5.நெல்லிக்கனி கொடுத்த வள்ளல் யார்? யாருக்குக் கொடுத்தான்?

விடை: அதிகன் ; ஔவையாருக்கு.

6.ஓரியின் குதிரை எவ்வாறு அழைக்கப்பட்டது?

விடை: ஓரி.

முன்

# D01134

## தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.நல்லியக்கோடனின் முன்னோர்களைக் குறிப்பிடுக.

விடை: ஓய்மான் நல்லியாதன், ஓய்மான் வில்லியாதன்.

2.பெருமாவிலங்கைத் தலைவன் யார்?

விடை: நல்லியக்கோடன்.

3.ஆம்பி என்றால் என்ன?

விடை: காளான்.

4.பாணரின் வறுமை நிலையைச் சிறுபாணாற்றுப்படை எப்படி வருணிக்கிறது?

விடை: பாணனின் வீட்டில் உணவு சமைப்பதற்குத் தேவையான அரிசி உள்ளிட்ட பொருள்கள் இல்லாது அடுக்களை வெறிச்சோடிக் கிடந்தது. மிகவும் பழைமையானதும் சிதைந்ததுமான வீட்டுச் சுவர். இதில் கரையான் புற்றுக் கிளம்பி இருந்தது. வீட்டுக் கூரையில் இருந்த கழிகள் (மூங்கில்கள் – வீடுகட்டப் பயன்படும் மரம்) கட்டுகள் அறுந்து கீழே விழுந்தன.

பாணனின் மனைவி பசியால் இளைத்த உடலை உடையவள். வயிறு ஒட்டிக் கிடந்தது. கைகளில் வளையல்களைத் தவிர வேறு அணிகலன்கள் எதுவும் இல்லை. பசித்துன்பம் வாட்டியதால் தன் வீட்டுக் குப்பையில் தானாகவே முளைத்துக் கிடந்த வேளைக் கீரையைப் பறித்து வந்தாள். தன் கை நகங்களினால் கிள்ளி வேகவைத்தாள். பணச் செலவு இல்லாமல் கிடைத்த அந்த கீரைக்கு இட வேண்டிய உப்புக்கூட அந்த வீட்டில் இல்லை. எனவே, உப்பில்லாமலேயே வெந்த கீரையை உண்ண அவ்வீட்டில் உள்ள பலரும் காத்திருந்தனர்.

முன்

# D01134

## தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.எயிற்பட்டினம் எங்குள்ளது?

விடை: எயிற்பட்டினம் கடற்கரையில் உள்ளது.

2.எயிற்பட்டினத்தில் பாணனுக்குக் கிடைக்கும் விருந்து யாது?

விடை: தேறலும் சுட்ட குழல் மீனும்.

3.ஆமூர் வாழ் மக்கள் யாவர்?

விடை: உழவர், உழத்தியர்.

4.உழவர்கள் தரும் விருந்து எத்தகையது?

விடை: வெண்மையான அரிசிச் சோறும், நண்டின் கறியும் கொண்டது.

5.கிடங்கிலில் புழுதி கிளம்பியதற்குக் காரணம் என்ன?

விடை: எப்பொழுதும் நடைபெறும் விழாக்கள்.

முன்

# D01135

## தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.நல்லியக்கோடனின் அரண்மனை எந்த மலை போன்று காட்சியளித்தது?

விடை: மேரு.

2.மன்னனின் வாயில் கதவு எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது?

விடை: அடையா வாயில் என்று சிறப்பிக்கப்படுகிறது.

3.நல்லியக்கோடன் தன் வீரர்களை எவ்வாறு ஊக்குவிப்பான்?

விடை: பயந்து நடுங்கி ஓடும் தன் படையினரைச் சுற்றி வளைத்து அவர்களுக்கு வீரமொழிகள் கூறி, அவர்களை வீரமுடன் போரிடச் செய்வான்.

4.அரிவையர் தம் மன்னனைப் பாராட்டிய வகை யாது?

விடை: நினைத்ததை முடிக்கும் ஆற்றல் உடையவன்; பெண்களால் பெரிதும் விரும்பப்படும் தன்மையன்; பெண்கள் வசப்படாதவன்; பெண்களின் வருத்தத்தை அறிந்து அதனைப் போக்குபவன்; அவர்களைப் பாதுகாக்கும் இயல்பை உடையவன் என்று நல்லியக்கோடனைப் பெண்கள் (அரிவையர்) புகழ்ந்து கூறினர்.

5.அறிவு மடம்படுதல் என்றால் என்ன?

விடை:அறிவு நிரம்பாதவர்கள் தவறானவற்றைக் கூறும்பொழுது அறியாதவன் போல் கேட்டல்.

முன்

# D01135

## தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.சிறுபாணனின் கையில் இருக்கும் சிறிய யாழ் என்று கூறப்படுவது எது?

விடை:சீறியாழ்.

2.பாணர்களுக்கு நல்லியக்கோடன் கொடுத்த ஆடை எத்தகையது?

விடை: மூங்கிலின் உள்பட்டையை உரித்தது போன்ற தூய்மையான மென்மையான ஆடை.

3.சமையல் கலையில் வல்லவன் யார்?

விடை: வீமன்.

4.வறுமையில் வாடும் ஒருவனுக்குத் துன்பத்தை நீக்குவதில் முக்கியமானவை எவை?

விடை: உடை, உணவு.

5.பாணனுக்கு நல்லியக்கோடன் கொடுத்த பரிசில்கள் யாவை?

விடை: தேர், குதிரை, பாகருடன் ஊரும் யானை, வெள்ளை எருது, அணிகலன் முதலியவை.

முன்

# D01136

## தன் மதிப்பீடு : வினாக்கள் - I

1.உவமை எவற்றை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும்?

விடை: வினை, பயன், வடிவம், வண்ணம் என்னும் நான்கினை அடிப்படையாகக் கொண்டு உவமை பிறக்கும்.

2.உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன் – இவ்வடியில் இடம் பெற்றுள்ள உவமை எந்த வகையைச் சேர்ந்தது?

விடை: வினை உவமம்.

3.பாம்பு வெகுண்டன்ன தேறல் – இவ்வடியில் இடம் பெற்றுள்ள உவமையை விளக்குக.

விடை: பாணர்களுக்கு விருந்தோம்புவதில் சிறந்தவன் நல்லியக்கோடன். இவன் பாணர்களுக்கு உணவுடன் நல்ல தேறலையும் (கள்) கொடுத்துக் குடிக்கச் செய்தான். இத்தேறலை உண்ட பாணர்களுக்குப் போதை மயக்கம் உண்டாயிற்று. இது பாம்பு கடித்த உடன் அதன் நஞ்சு தலைக்கு ஏறி மயக்குவது போன்று இருந்ததாம். இதனை, "பாம்பு வெகுண்டன்ன தேறல்" என்று நத்தத்தனார் கூறுவதன் மூலம் அறியலாம். இது தேறல் உண்டதன் பயன். ஆதலால் இது பயன் உவமம் ஆயிற்று.

4.கேசாதி பாத வருணனை முறை – விளக்கம் தருக.

விடை: தலை முதல் கால் வரை வருணிப்பது கேசாதி பாத வருணனை முறை ஆகும்.

5.நறுநீர்ப் பொய்கை அமைந்துள்ள நிலம் எது?.

விடை: நறுநீர்ப் பொய்கை அமைந்துள்ள நிலம் மருதம்.

முன்

# D01136

## தன் மதிப்பீடு : வினாக்கள் - II

1.அடையா நெடுங்கதவம் – விளக்குக.

விடை: பரிசிலர் பரிசு பெறுவதற்கு எவ்விதத் தடங்கலும் இல்லாமல் அரண்மனை வாயில் கதவு மூடப்படாமல் எப்பொழுதும் திறந்தே இருப்பது.

2.தேர்கள் யாரால் உருவாக்கப்பட்டன?

விடை: தேர்கள் கைதேர்ந்த தொழில் திறன் மிக்க தச்சர்களால் உருவாக்கப்பட்டன.

3.யாழின் முக்கிய உறுப்புகள் யாவை?

விடை:பத்தர், தண்டு, திவவு, பச்சை, நரம்பு.

4.விருந்து என்றால் என்ன?

விடை:புதுமை.

5.உப்பில்லாத வேளைக் கீரையைச் சமைத்து உண்ட பாணர் நிலையை விளக்குக.

விடை:பாணனின் வீட்டில் உணவு சமைப்பதற்குத் தேவையான அரிசி உள்ளிட்ட பொருள்கள் இல்லாது அடுக்களை வெறிச்சோடிக் கிடந்தது. மிகவும் பழைமையானதும் சிதைந்ததுமான வீட்டுச் சுவர். இதில் கரையான் புற்றுக் கிளம்பி இருந்தது. வீட்டுக் கூரையில் இருந்த கழிகள் (மூங்கில்கள் – வீடுகட்டப் பயன்படும் மரம்) கட்டுகள் அறுந்து கீழே விழுந்தன.

பாணனின் மனைவி பசியால் இளைத்த உடலை உடையவள். வயிறு ஒட்டிக் கிடந்தது. கைகளில் வளையல்களைத் தவிர வேறு அணிகலன்கள் எதுவும் இல்லை. பசித் துன்பம் வாட்டியதால் தன் வீட்டுக் குப்பையில் தானாகவே முளைத்துக் கிடந்த வேளைக் கீரையைப் பறித்து வந்தாள். தன் கை நகங்களினால் கிள்ளி வேக வைத்தாள். பணச் செலவு இல்லாமல் கிடைத்த அந்த கீரைக்கு இட வேண்டிய உப்புக் கூட அந்த வீட்டில் இல்லை. எனவே, உப்பில்லாமலேயே வெந்த கீரையை உண்ண அவ்வீட்டில் உள்ள பலரும் காத்திருந்தனர்.

முன்